# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எ�ஸ். வேங்கடரமணி.

| | | |
|---|---|---|
| மாலை 2 | ஞாயிறு 18-6-39 பிரமாதி௵ ஆனி௴ 4௳ | முத்து 12 |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| நிலவரி நிர்ணயம் | ... ... ... ... ... | 352 |
| குறிப்பு | ... ... ... ... ... | 354 |
| வார நடப்பு | ... ... ... .... ... | 355 |
| இலவம் பஞ்சின் உபதேசம் | ... ... ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி | 357 |
| வாழ்க்கைப் புயல் | ... ... "வஸந்தன்" | 359 |
| கேர்ஸப்பா நீர்வீழ்ச்சி | ... ... ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி | 364 |
| வரதக்ஷிணை | ... ... "கேஸரி" | 367 |
| யுகோசிலேவியா | ... ... ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி | 372 |
| சிறுவர் பகுதி | ...ஸ்ரீ கே. எஸ். நரஸிம்மாச்சாரி, பி.ஏ. | 375 |
| வலைவீச்சு | ... ... | 377 |
| லைப் அஷ்யூரன்ஸ் | ... ஸ்ரீ எஸ். கே. சுப்ரமணியம் | 379 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில்குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# நிலவரி நிர்ணயம்

ஸ்ரீ க. சந்தானம் நமது தேர்ச்சி பெற்ற அரசியல் வாதிகளில் ஒருவர் நமது நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து நுணுக்கமான முடிவு கட்டும் திறமை வாய்ந்தவர். அப்பேர்ப்பட்டவர் நமது மாகாணத்து நிலவரி நிர்ணயத்தைப்பற்றி யோசனை கூறினால் அதை யாவரும் ஆழ்ந்து கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம் அதுவும் சர்க்கார் நிலவரியை நிர்ணயஞ் செய்வதுபற்றி இப்பொழுது திட்டம் போட்டுக் கொண்டிருப்பதால் ஸ்ரீ க. சந்தானம் சரியான தருணத்தில்தான் தனது யோசனைகளைக் கூறி யிருக்கிறார்.

ஜுன் 12-ம் தேதியன்று மாயவரத்தில் கூடிய திருச்சி—தஞ்சை ஜில்லா மிராசுதாரர்கள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய பொழுது அவர் பின்வருமாறு கூறினார்:

"நிலவரி தற்சமயம் நமக்கு ஒரு பாரமாக இருப்பது மட்டுமல்ல; நமது கிஸ்தி செலுத்தும் சக்தி குறையக் குறைய அதன் பாரம் அதிகமாகிறது. ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசமும் படுகிறது. ஆகையால் வரிவஜா மட்டும் போதாது. வெறும் வருமான வரி போல சக்திக்குத் தகுந்தாற் போல மாறிவரும் படியாக நிலவரியை புது முறையில் அமைக்க வேண்டும். சிறிய பட்டாதார்கள் அதிகமாக இருப்பதால் நிகர வருமான வரியாக நிலவரியை மாற்றி யமைப்பது சாத்திய மில்லை. அடியிற் கண்ட திட்டம் ஒப்பு கொள்ளப் பட்டால் இந்தப் பிரச்னையை நியாயமாகத் தீர்க்கலாம் என்று நம்புகிறேன். (1) மாகாண முழுவதும் தரத்திற்கேற்றவாறு ஏக்கர் ஒன்றுக்கு நாலணுவிலிருந்து இரண்டு ரூபாய் வரை நிலவரியை ஒரு சாசுவதமான புஞ்சைத் தரம் தீர்வையாக விதித்து விடலாம். (2) சர்க்கார் அளிக்கும் நீர்பாசன வசதிகளுக்காக மகசூலை அனுசரித்து அதிகப்படி தண்ணீர்த் தீர்வை (நஞ்சைக்கு) விதிக்க வேண்டும். (3) ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் வருமானம் வருபவர்களுக்கு வருமான வரி விதிக்க வேண்டும்.

இந்தமாதிரி ஏற்பாட்டினால் மூன்று முக்கியமான லட்சியங்கள் நிறை வேறி விடுகின்றன. (1) ரயத்துவாரி தீர்வையும் ஜமீன் குயிட்குரென்டைப் போல் சாசுவதமாகி விடும் (3) தண்ணீர்த் தீர்வையும் வருமான வரியும் எல்லோருக்கும் ஒரே விதமாக மகசூலை அனுசரித்து நிர்ணயமாகிவிடும். நஞ்சை நிலத்தின் பேரிலுள்ள வரி விலை வாசியைப் பொருத்திருக்கும், (3) ஏழைக் குடியானவர்களுக்கு விசேஷ சலுகை கிடைக்கும்."

ஸ்ரீ சந்தானம் கூறும் யோசனைகளில் முதல் அயிட்டத்தை நாம் முழுமனதுடன் அங்கீகரிக்கிறோம். நிலவரி நிர்ணயத்தில் அதுதான் நியாயமான, நிரந்தரமான, முறையாக இருக்கக்கூடும். அதனால் ஜமீன் தீர்வையைப்போல ரயத்துவாரித் தீர்வையும் ஒரு மாதிரியாக சாசுவதமாகி விடுவது நிர்வாக இலாகாவிற்கும் மிகவும் சாதகமாகும். வேலை வெகுவாகக் குறையும். நஞ்சைக்கு விதிக்கும் அதிகத் தீர்வை யொன்றேதான் வருஷா வருஷம் நஞ்சை சாகுபடிப் பெருக்காலோ குறைவாலோ மாறும் அயிடமாக (Fluctuating Item) இருக்கும். நிலவரியும் இப்பொழுதிருப்பதில் சரிபாதியாக மட்டும் குறையும். சர்க்காருக்கும் அதிகமாக வருமானக் குறைவு ஏற்படாது.

அடுத்தபடியாக, நஞ்சை சாகுபடிக்கு மகசூலை அனுசரித்து தண்ணீர்த் தீர்வை விதிக்கவேண்டும் என்று ஸ்ரீ சந்தானம் சொல்லுவது அவ்வளவு உசிதமா என்பது

சந்தேகமாக இருக்கிறது. அந்த மாதிரி ஏற்பாடு நிர்வாக இயந்திரத்திற்கு ஒரு பெரிய தொல்லை என்பதைத் தவிர அது அவ்வளவு நியாயமானதா என்றுகூட யோசனை செய்யவேண்டும். புஞ்சைத் தீர்வையை தரத்தின்படி நாலணா முதல் இரண்டு ரூபாய் வரையில் மாற்றி விதிக்கும் பொழுதே கீழ்த்தர நிலங்கொண்ட விவசாயிக்கு ஒரு சலுகை ஏற்பட்டுவிடுகிறது. அதற்குமேல் தண்ணீர்த் தீர்வையிலும் மகசூலுக்கு ஏற்றவாறு வரி விதிப்பதென்றால் அதுமற்றொரு சலுகையாகிறது. அது சரியல்லவென்று நமக்குத் தோன்றுகிறது. ஏகராவுக்கு இவ்வளவு என்று விஸ்தீரணத்தின்மேல் தண்ணீர்த் தீர்வை விகிதம் ஏற்படுத்துவதுதான் உசிதம் என்று தோன்றுகிறது. விளைச்சலுக்கு மட்டுந்தான் தண்ணீர்த் தீர்வை என்ற நிபந்தனை இருந்தால் போதும் என்றே தோன்றுகிறது. முடிவில் விவசாயிக்குக் கூட இதுதான் சௌகரியம் என்பது நமது அபிப்ராயம். ரெவின்யூ கணக்குகள் காலாகாலத்தில் முடிவதற்கும் இதுதான் சௌகரியம். விஸ்தீரணத்தைப் பொருத்து இது ஒரு மாறுதல் அடையும் அபிட்டமாக இருப்பது நல்லது; மகசூலைப் பொருத்து மாறுதல் அடைவது சிலருக்கு பளுவாக முடியும். எரு முதலியன அதிகமாகப்போட்டு செய் நேத்தி செய்பவர்களுக்கு ஒரு அபராதமாக வந்து முடியும்.

இந்த ஏற்பாட்டால் நஞ்சை நிலத்தின் மீது ஏற்படும் வரி விலைவாசியைப் பொருத்திருக்கும் என்பதும் அதனால் ஏழைக் குடியானவர்களுக்கு விசேஷ சலுகை கிடைக்கும் என்பதும் ஓரளவுதான் நடைமுறையில் உண்மையாகும். இந்தச் சலுகையால் ஏற்படும் பலன்களை அவர்கள் பூராவாக அடைவதற்கு இடையே பல இடையூறுகள் இருக்கின்றன—கிஸ்தி வஜாவால் பலன் பெறுவதில் இருப்பதுபோல.

ஓரளவுக்கு மேற்பட்ட வருமானத்தின் மீது வருமான வரி விதிப்பதன் அவசியத்தைப்பற்றி ஸ்ரீ சந்தானம் கூறியிருப்பது மிகவும் சரி. இன்னும் ஏன் அந்த முறையிலாவது சர்க்கார் சிரத்தையெடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் நமது கேள்வியாக இருக்கக்கூடும்.

நிலவரியில் ஒரு பாகங்கூட கிராமத்தாலேயே செலவிடப்படுவதற்கு கிராமத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்று ஸ்ரீ சந்தானம் ஒரு பெருங்குறையைச் சுட்டிக்காட்டுகிறார். செஸ் என்னும் சிறுதுளியை ஜில்லா போர்டு பாதி விழுங்கிவிடுகிறது.—ஒரு உபயோகமுமில்லாமல். செலவைத்தவிர நிலவரியில் நாலில் ஒரு பங்கை கிராமத்திற்குக் கொடுத்து பஞ்சாயத்துகளை உஜ்ஜீவிக்கும்படி செய்து நிலைநிறுத்த வேண்டுமென்றுகூறுகிறார். பஞ்சாயத்து தானே சில வரிகள் இயற்றிக் கொள்வது மேல் அல்லவா? நிலவரியை சில பெரிய மாகாணத் திட்டங்களுக்கு வினியோகப்படுத்திக் கொள்வது மேல் அல்லவா? அதுதான் சரியான நீதி முறைகூட என்றாலும் ஸ்ரீ சந்தானத்தின் யோசனைகளை சர்க்கார் நன்றாகக் கவனித்து தங்கள் திட்டங்களை வகுப்பார்கள் என்று நம்புகிறோம்.

---


## தமிழ் நாட்டுச் சிறு கதைகள்—1

**மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்**

(மகரிஷி வ. வே. சு. அய்யர் எழுதியது)

சாதாரண பைண்ட் அணா 12. (தபால் செல்வு வேறு) காலிகோ பைண்ட் ரூபாய் 1.

பிரதிகளுக்கு:

**சுவேதாரண்ய ஆசிரமம்**, 312, தம்பு செட்டித் தெரு, சென்னை.

குறிப்பு

# ராஜாக்கள் முடிவு

சமஸ்தான மன்னர்கள் பம்பாயில் கூடி ஆக்ஞாபத்திரத்தை ஆராய்ந்து அது திருப்தியாயில்லையென்று தள்ளிவிட்டார்கள். ஹைதாரி கமிட்டிச் சிபார்சுகளின் அடிப்படையான அம்சங்களைக்கூடத் திருப்தி செய்யவில்லை என்பது அவர்கள் கட்சி. அவர்களது உரிமைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் போதுமான பாதுகாப்பு அளிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

மன்னர்கள் சமஷ்டியில் சேருவார்கள் என்ற எண்ணம் இதனால் சிதறிப் போய்விட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் ஆக்ஞா பத்திரத்தை இன்னும் கொஞ்சம் மாற்றி சமஸ்தானாதிபதிகளைத் திருப்திசெய்ய மற்றொரு முயற்சி செய்வார்களோ என்னமோ நாம் அறியோம். அப்படியின்றி வைஸ்ராயும் பிரிட்டிஷ் சர்க்காரும் மனம் உடைந்து "தொலையட்டும் இந்த பிடரேஷன்!" என்று பேசாமல் இருந்தாலும் இருந்துவிடலாம். ஆனால், மன்னர்கள் இப்படி முடிவுசெய்தது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்காதென்பது மட்டும் நிச்சயம். சென்ற சில மாதங்களாக மன்னர்கள் மனப்பான்மையை அறிந்தவர்கள் ஆக்ஞாபத்திரம் நிராகரிக்கப்படும் என்றே எண்ணினார்கள். மகாத்மா காந்திகூட இதை எதிர்பார்த்தே சுதந்தரப் போரை ஒத்திவைத்தார். ஆகையால், மன்னர்கள் ஆக்ஞாபத்திரத்தை ஒப்புக்கொண்டு சமஷ்டியில் சேர இசைந்திருந்தால்தான் எல்லோருக்கும் ஆச்சர்யமாக இருந்திருக்கும்.

மன்னர்கள் அப்படி ஒப்புக்கொண்டிருந்தால் 1940-ம் வருஷத்தில் சமஷ்டியை அமைக்க முயற்சிகள் தடபுடலாக நடந்திருக்கும். அந்த சமயத்தில் வைஸ்ராய் காங்கிரஸைத் திருப்திசெய்ய முன்வந்திருப்பார். அப்போது காங்கிரஸ் கோரிக்கைகளை நிராகரிக்கப்பட்டால், அதாவது காங்கிரஸ் கோரியபடி சமஷ்டியில் அதிகாரம் கொடுக்கப்படாவிட்டால், சட்டமறுப்பு ஆரம்பமாகியிருக்கும்.

உண்மையில், அப்படி ஒன்றும் இப்போது நிகழவில்லையாதலால் 'இருந்திருக்கக்கூடிய' விஷயங்களைப்பற்றி ஆராயவேண்டியதில்லை. ஆனால் இப்போது மன்னர்கள் சமஷ்டியில் சேரவிரும்பவில்லையாதலால், சமஷ்டி அநேகமாகச் செத்துப்போய் விட்டதென்றே கூறலாம். அல்லது சமஷ்டியை குறிப்பிடாத காலம் வரை அதிகாரிகள் தள்ளிப் போட்டுவிடுவார்கள் என்று நிச்சயம். இனிமேல் வழக்கம்போல் மத்ய அஸெம்பிளியின் காலம் நீடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய உயிரற்ற விளையாட்டுச் சட்டசபையில் காங்கிரஸ் பிரதிநிதிகள் உட்கார்ந்துகொண்டிருப்பார்களா? இந்தியாவின் எதிர்காலத்தை பிரிட்டிஷ் சர்க்கார் நிர்ணயிக்க விட்டுவிடுவார்களா? அல்லது, இந்திய சுதந்தரத்தை அடைய காங்கிரஸ் என்ன வேலை செய்வார்கள்?

இவைபோன்ற கேள்விகள் இப்போது எழுகின்றன. தற்கால அரசியல் நிலையை ஊன்றிக் கவனிக்கும்போது ஓர் பெரிய நெருக்கடி சமீபத்தில் உண்டாகப்போகிறதென்பது மட்டும் நிச்சயம். மத்ய சர்க்காரைக் கைப்பற்ற ஓர் போராட்டம் இன்னும் சில மாதங்களில் உண்டானால் நாம் ஆச்சர்யப் படுவதற்கில்லை. மன்னர்கள் ஆக்ஞாபத்திரத்தை ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இந்தப் போராட்டம் அவசியம் நேர்ந்திருக்கும். மன்னர்கள் ஒப்புக்கொண்டிருப்பதால் அது சீக்கிரம் வந்திருக்கும். இப்போது சில மாதங்கள் கழித்து உண்டாகும்; அவ்வளவுதான். வடதஞ்சை ஜில்லா மகாநாட்டில் ஸ்ரீ. கே. சந்தானம் கூறியயடி எந்த சந்தர்ப்பத்திலும் மத்ய சர்க்காரைக் கைப்பற்ற ஓர் போராட்டம் தொடங்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீ சந்தானம் இரண்டு வருஷங்களுக்குமேல் காங்கிரஸ் மந்திரிசபை வேலை செய்யாதென்று கூறுகிறார். ஆனால், அடுத்த வருஷத்திலேயே காங்கிரஸ் மந்திரிசபை ராஜிநாமாச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுமென்று நமக்குத் தோன்றுகிறது.

இவற்றை உத்தேசித்துத்தான் காந்திஜி சமஸ்தானப் போரை நிறுத்தி பெரியதோர் வேலைத்திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார் என்று கூறுகிறோம். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியரின் மனோ உணர்ச்சிகளையும் மாகாண அரசாங்கங்களின் கோரிக்கைகளையும் நன்றாக அறிந்தவர்களாகையால், தேசத்தில் கொடிய போர் உண்டாகும் அவசியம் இல்லாமலே மத்திய சர்க்காரை பொறுப்பு வாய்ந்ததாகச் செய்வார்களென்று நம்புகிறோம். சமஷ்டி வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும்; ஆனால் மத்ய

சர்க்கார் பொறுப்பில்லாமல் இருக்கும் கேலிக் கூத்து ஒழியவேண்டும்.

எதிர்காலத் திட்டத்தை வகுக்க அடுத்த மாதம் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடப்போகிறது. அது தேச சரித்திரத்தில் முக்கியமாகவுள்ள தீர்மானங்களைச் செய்யப்போகிறது. மத்ய சர்க்காரை பொறுப்புள்ளதாகச் செய்யாவிட்டால் பிரிட்டனுக்குப் புத்திகற்பிக்க பிரிட்டிஷ் துணிகளை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்ற ரஸமான யோசனையை ஸ்ரீ. சந்தானம் வெளியிடுகிறார். இவைபோன்ற பல யோசனைகளைத் தர்க்கித்து அ. இ. கா. க. ஓர் தீர்மானமான முடிவுக்கு வரும் என்று நம்புகிறோம்.

## ஹிந்தி எதிர்ப்பு

சமீபத்தில் சென்னை சர்க்கார் ஹிந்தி எதிர்ப்புக் கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்துவிட்டார்கள். ஸ்ரீ. ஈ. வே. ராமசாமி நாயக்கரையும் விடுதலை செய்தார்கள். இதை ஓர் சமாதான சமிக்ஞை என்றே கூறலாம். இதைக் கிளர்ச்சிக்காரர்கள் அறிந்து மறியலைக் கைவிட்டு விடுவார்களென்று எதிர்பார்த்தோம். அப்படி எதிர்பார்த்ததற்குப் போதிய காரணம் இருந்தது. ஏனென்றால், கிளர்ச்சிக்காரர்கள் ஆக்ஷேபிக்கும் கட்டாயத்தன்மையை சர்க்கார் வெகுவாகத் தளர்த்திவிட்டார்கள். முதலாவதாக ஹிந்தியில் பரீக்ஷையில் தேறாவிட்டால் அதனால் மாணவர்கள் நிறுத்தப்படமாட்டார்கள். இரண்டாவதாக, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஹிந்தியைப் புகுத்தாமல் பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்களைக் கலந்துகொண்டுதான் ஹிந்தி கற்பிக்கப்படுகிறது. மேலும், பெற்றோர்கள் ஆக்ஷேபணை செய்தால் மாணவன் வேறு பள்ளிக்கூடத்தில் சேரலாம். அவன் ஹிந்தி படிக்கவேண்டியதில்லை. இவ்வளவு தூரம் சர்க்கார் சலுகை காண்பித்து சம்பந்தப்பட்டோர்களின் பூரண சம்மதத்தைப் பெற்று இன்னும் 100 பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைப் பாடமாக வைத்தார்கள். இவ்வளவுதூரம் செய்த பிறகு கட்டாயம் எங்கிருந்து வந்தது?

மாணவர்களை ஹிந்தி கட்டாயமாகப் படிக்கவேண்டும், எல்லாப் பள்ளிக்கூடங்களும் கட்டாயமாகச் சொல்லித்தர வேண்டும் என்று சொன்னாலல்லவோ கட்டாயம்? எந்த மாணவனுக்கு ஹிந்தி வேண்டாமென்றிருக்கிறதோ அவன் அதைப் படிக்காமலிருக்க இவ்வளவு சௌகர்யம் செய்திருக்கும்போது 'சர்க்கார் கட்டாய ஹிந்தி கற்பிக்கிறார்கள்' என்று சொல்வது அபத்தமாகும்.

ஹிந்தி எதிர்க்காரர்கள் சர்க்காரின் தயாளத்தை உத்தேசித்து கிளர்ச்சியைக் கைவிடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் மறுபடியும் 19 தேதியிலிருந்து மறியல் ஆரம்பிக்கப் போவதைக் கண்டு வருந்துகிறோம்.

---

தர்க்கவாதத்தை யொட்டி மகாத்மா காரியம் செய்ய ஆரம்பிப்பதில்லை; மகத்தான தீர்க்கதரிசனத்துடன் தான்செய்கிறார். ஆனால் மற்ற எல்லா மனிதர்களையும் போலவே அவருக்கும் கையாள் தேவை. சண்டையில் மோஸஸ்கூட கைநீட்டித் தொழ ஆரோனையும் ஜோஷுவாவையும் உதவிக் கழைத்தாராம். மகாத்மாவுக்கு ராஜாஜியும் மகாதேவ தேசாயும் அருகிலிருந்தால் தான் உற்ற துணையாக இருக்கும்.

தான் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் ராஜாஜியைப் போல் ராஜதந்திர யோசனை கூறுபவர்கள் யாருமே கிடையாது. பட்சபாத மில்லாமல் நேர்மையுடனும், தெளிவாகவும், நியாயமாகவும், முன்யோசனையுடனும் கூட நடந்து கொள்ள முடியும் அவரால். ஆனால் சிறிய தகராறுகளில் கட்சிவாதம் செய்யும்போது தான் அவர் அபாயகரமாக வார்த்தையை வைத்துக் கொண்டு வித்தை செய்பவராகிறார். அப்பொழுது அவர் கெட்டிக்காரத்தனம் வெறும் சாதுர்யமாகவும், சால்ஜாப்பாகவும், அர்த்தமில்லாத பிடிவாதமாகவும் கூட மாறி விடுகிறது. ஆனால் வல்லபாய் முதல் தர நிர்வாகஸ்தர். 'தளபதி' என்றால் அவரைத் தான் சொல்ல வேண்டும். தேசத்திற்குச் சொந்தமாக வேண்டியவர் ஒரு கட்சிக்குச் சொந்தமாகி விட்டார் எனறு பர்க் விஷயத்தில் கூறுவதுண்டு. ராஜாஜி விஷயத்தில், தேசத்திற்குச் சொந்தமாக வேண்டியவர் ஒரு மாகாணத்தில் அடங்கிப் போய்விட்டார் என்று சொல்லவேண்டும். ஆகையால்தான் அவர் குணத்திலுள்ள சிறிய குற்றங் குறைகள் பெரிதாக்கப்பட்டு பிரமாதப்படுத்தப்படுகின்றன.

—இந்தியன் எக்ஸ்பிரஸ்,

# வார நடப்பு

காந்திஜியின் நூதன சமஸ்தானக் கொள்கையை ஆக்ஷேபித்த சிலருக்கு அவர் தலைவர்களைப்பற்றி எழுதிய ஹரிஜன் கட்டுரையில் விடையளித்திருக்கிறார். "தேர்ச்சிபெற்றவன் என்ற ஹோதாவில் என்னை வந்து கேட்டவர்களுக்கு என் அபிப்ராயத்தைச் சொன்னேனேயொழிய நான் சொல்லுகிறபடியே அவர்கள் நடக்கவேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. பொறுப்பாட்சி நடத்தும் போருக்கு நான் எடுத்துக் காட்டிய யோசனைகள் தகுந்ததல்ல என்று தலைவர்களுக்குத் தோன்றி அவர்கள் முறையில் அவர்களுக்கு பூரண நம்பிக்கை இருந்தால், அவர்கள் யாதொரு சம்சயமுமில்லாமல் தங்கள் முறையையே பின்பற்றலாம்" என்று கூறுகிறார். இந்தக் கட்டுரை, ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் அததன் நிலையை அனுசரித்து காந்திஜீ கொடுக்கப்போகும் சமயோசித புத்திமதியைக் கண்டித்துப் பேசுகிறவர்களுக்கு ஒரு சாட்டைபோல் இருக்கிறது.

திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி காந்திஜீயின் அபிப்பிராயப்படி நடக்க தீர்மானித்துவிட்டது. சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்த நிச்சயித்தது. இனி காந்திஜியின் அபிப்பிராயத்துக்கு சிறிதளவும் வித்தியாசமில்லாமல் சமஸ்தான முன்னேற்றத்தின் பொருட்டு செய்யக்கூடிய அலுவல்களை நடத்த தீர்மானித்தது. சமஸ்தானாதிபதியுடன் கலந்து சமரஸ மேற்படுத்த ஒரு கமிட்டியையும் அமைத்தது.

பல முக்கிய தீர்மானங்கள் செய்வதில் ஈடுபடுவதுடன், மாகாண காங்கிரஸ் மந்திரிகளுக்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி பம்பாயில் இந்த மாதக் கடைசியில் கூடும் காங்கிரஸ், விவாதம் நடத்தும் என்று ஒரு செய்தி கூறுகிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்துக்கு முன் காங்கிரஸ் பிரதம மந்திரிகளின் கூட்டம் ஒன்றும் நடைபெறும் என்று தெரிகிறது. அதில் பொதுவாக காங்கிரஸ் மாகாணங்களில் செய்யப்போகும் சீர்திருத்தங்களைப்பற்றி ஆலோசனை நடக்கும் என்பது விளங்குகிறது.

பம்பாயில் ஜாம் ஸாஹிபின் தலைமையில் நடைபெற்ற சமஸ்தானாதிபதிகளின் மகாநாடு பல முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றிற்று. ஸமஸ்தானஜனங்களுக்கு மன்னர்களும் அவர்கள் மந்திரிகளும் காலப்போக்கை அனுசரித்து சுயேச்சை யளிக்கவேண்டும் என்று தலைவர் சொன்னதை ஆமோதித்தது. காந்திஜீயின் நூதன சமஸ்தானக் கொள்கையை பெரிதும் மெச்சி அதனால் மன்னர்களும் பிரஜைகளும் நலனையடைவார்கள் என்று தனக்கிருக்கும் நம்பிக்கையை எடுத்துக் காட்டிற்று. சமஷ்டிப் பிரவேச சாஸனத்தை தங்களுக்கு அனுகூலமாக இல்லை என்று மகாநாடு ஒருமிக்க நிராகரித்தது. இத் தீர்மானம் தேசியச் சரித்திரத்தில் ஒரு முக்கியத்வம் வகிக்கும் என்று ஏற்படுகிறது.

மந்திரி பிரகாசம் நடத்திய ஒரு சொற்பொழிவில் நிலவரி சம்பந்தமாக சென்னை சர்க்கார் கொண்டுவரப்போகும் சீர்திருத்தங்களைப்பற்றி விளக்கம் செய்தார். நிலச்சுவான்தார்களுடைய கஷ்ட நிலையைப் போக்க நான்கு மசோதாக்கள் சட்டசபையில் கொண்டுவரப்போவதாகக் கூறுகிறார்.

மாயவரத்தில் நடந்த தஞ்சாவூர் திருச்சி மிராசுதார்களின் மகா நாட்டில் ஸ்ரீ கே. ஸந்தானம் தலைமை வகித்துப் பேசியபோது, விவசாயிகளின் துர்பலமான நிலையைச் சுட்டிக்காட்டி, அவர்களை முன்னேற்ற சில யோசனைகளையும் எடுத்துக் கூறினார். நெல்லின் குறைந்த விலையே விவசாயிகளின் ஏழ்மைத் தனத்துக்குக் காரணம் என்று விளக்கிக் காட்டி, நெல் விலையை ஏற்ற இந்தோ-பர்மா வியாபார ஒப்பந்தத்தை சீர்திருத்தம் செய்யவேண்டுவது அவசியம் என்று கூறுகிறார்.

ஆங்கிலோ—ஸோவியத் உடன்படிக்கை பிரிட்டிஷ் தூதர் மூலமாக மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டது. இங்கிலாந்திலும், ப்ரான்ஸிலும் ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடும் என்ற நம்பிக்கை பரவி இருக்கிறது.

இது இப்படி இருக்க ரோம்-பெர்லின் அச்சுக்காரர்கள் தங்கள் பலத்தை பெருக்க தீவிர முயற்சி செய்துவருகிறார்கள். ஜெர்மனியும், இத்தாலியும், ஸ்பெயினுடன் மிக்க சிநேகத்துடன் கூடிக் குலாவி வருகின்றன. ஜப்பான் கூட இந்த கோஷ்டியில் சேர மெள்ள தலையைத் தூக்கிக் காட்டுகிறது. ஆனால் சந்தர்ப்பத்தை யொட்டித்தான்!

மாட்ரிட், ரோம், பெர்லின் டோக்யோ, இவை ஒன்றோடொன்று தீவிரமாகப் பேசி வருவதாகத் தெரிகிறது.

# இலவம்பஞ்சின் உபதேசம்

(ஸ்ரீமதி ராஜலக்ஷிமி)

ஒரு நாள் நள்ளிரவு, இரவு பனிரண்டு மணியிருக்கலாம். அகஸ்மாத்தாகத் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டேன். பேச்சுக் குரல் கேட்டது. என் அறையில் என்னைத் தவிர வேறொருவரும் இல்லை. நாலா பக்கமும் இருட்டின் மத்தியில் கண்ணை விழித்துப் பார்த்தேன். ஒன்றும் புரிய வில்லை. சப்தமுமில்லை. கண்ணை மூடிக் கொண்டு யார் தான் பேசுகிறார்கள், அது தான் என்ன, என்று கவனிக்கலானேன். திரும்பவும் பேச்சாரம்பமாயிற்று.

“ஹா! நான் எவ்வளவு அழகாகக் காய்த்துத் தொங்கினேன்! என் தாய் என்னைப் பார்த்து எத்தனை ஆனந்தம் கொள்வாள்? என் தேகத்தின்உருட்சியைப்பார்த்து ஆனந்தக் கண்ணீர் வீடுவாள். ஒவ்வொரு சமயத்தில் பக்கத்திலிருக்கும் மாமரத்தைப் பார்த்து, “ஏ! அம்பி என்னைப் பார். என் குழந்தைகள் நான் லோலாக்கு அணிந்திருப்பது போலத் தொங்குகிறார்கள். நல்ல காற்றில் அசைந்தாடி ஒருவர்க்கொருவர் அன்யோன்யமாய் முத்தமிடுகிறார்கள்.” என்று சொல்லிச் சொல்லி மகிழ்வாள். ஆனால் ஒரு காரியம் பார் என்னை என் தாய் அடைந்ததும், என் சகோதரிகளான இலைகள் என் மேல்தான் பிரியமா யிருப்பார்கள் என்றோ என்னமோ சொல்லி வைத்தாற் போல பூமியில் விழுந்து விடுவார்கள். அப்பொழுது என் தாயைப் பார்த்தால் பரிதாப மாயிருக்கும். எனக்கு அவளைப் பார்த்ததும் புருஷனால் விடப்பட்ட ஒரு ஸ்த்ரீ தன் சகல ஆபரணங்களையும் களைந்து விட்டு தன் குழந்தைகளையே தன் சந்தோஷ அலங்காரம் என்று தொட்டுத் தொட்டுப் பார்ப்பதுபோல என்னைத் தொட்டுப் பார்ப்பதாகத் தோன்றும். இப்படியாக செல்லக் குழந்தையாக வளர்ந்து வருகையில் எனக்கு முன்னால் பிறந்த சகோதரர்கள் ஒவ்வொருவராய் பெரியவர்களானார்கள். மஞ்சளாக மாறினார்களோ இல்லையோ நமது சத்துருமனிதனிருக்கிறானே, அவன் கண்ணில் உறுத்திற்றோ என்னமோ? மறு நாள் ஒரு பெரிய மூங்கிலை எடுத்றுக் கொண்றி ஒரு சாக்கைத் தோளில் போட்டுக்கொண்டு என் அம்மாவிடம் வந்தான் பாரு.........” என்று சொல்லுகையில் அதன் நெஞ்சை யடைத்துக் கொண்டது. • கொஞ்சம் சமாதானம் செய்துகொண்டு திரும்பவும் சொல்ல ஆரம்பித்தது “படேர் படேர் என்று அடித்தான். அந்த அடியை நினைத்தாலும் நெஞ்சு பதறுகிறது. தயவற்ற மனிதன்! என் சகோதரர்களனைவரும் அடி தாங்காமல் பொத்து பொத்தென்று கீழே கதறிக்கொண்டே விழுந்தார்கள். அப்பொழுது எனக்கு! ஐயோ! நாமும் ஒரு நாள் இப்படித் தானே பட வேண்டு’மென்று நினைத்த போது குடல் நடுக்க மெடுத்தது. இதற்குள்ளாக அந்த மனிதன் “டேய்! இவைகளைக் கொண்டு போய் மேல் மாடியில் வெயில் படும் படியாகப் போட்டுவை. இது வெடிக்கட்டும், அதற்குள் பச்சையாயிருக்கும் காய்களும் பழுத்து விடும். எல்லாவற்றையம் ஒன்றாய் அடித்து நல்ல துணியாய் வாங்கி வேண்டிய தலையணையும் மெத்தைகளும் தைத்துக் கொள்ளலாம்” என்றான். அந்த இரக்க மற்ற மனிதன் சுயநலவாதி என்னையடித்து உதைத்ததும் போதாதென்று என்னை எப்பொழுதும் சிறையில் வைத்து விட்டானே. அதை நினைத்தால் என் மனம் என்ன பாடு படுகிறது? என் தாய் எங்களைப் பிரிந்து என்ன பாடு படுகிறாளோ?” என்று ஓ வென்று கதற ஆரம்பித்து விட்டது தலையணை.

இவ்வளவு நேரமாக ‘ஊம், ஊம்,’ என்று கேட்டுக் கொண்டிருந்ததே என் படுக்கையிலுள்ள துணிகள் அவைகளும்புலம்பஆரம்பித்து விட்டன. “ஐயோ! இலவம்பஞ்சண்ணா! நீ உன்னுடைய துக்கத்தையே பிரலாபித்தாயே ஒழிய பரிதாபகரமான என்னுடைய துக்கத்தைப் பற்றி நினைக்கவில்லையே! நான் பட்ட கஷ்டங்களைச் சொல்ல ஆரம்பித்தேனானால் நீ தைரிய முள்ளவனானால் தான் கேழ்க்க முடியும். எனக்குச் சொல்லியழுதால் தான் துக்கம்தீரும். சொல்லுகிறேன் கேளு. உன் தாயைப் போல் தைரியமுள்ளவளல்ல என் தாய். ஒரு சிறு குழந்தைக்கும், கடைசியில் சிறு பூனைக்குட்டிக்குங்கூடப் பயப்படுவாள். பூனை தன் கிளைகளில் ஏறினால் வளைந்து கொடுப்பாள். ஒரு குடும்ப ஸ்திரீ எப்படி நாணிக் கோணிக் கொள்வாளோ அது போல வாயுபகவானுக்கு வளைந்து கொடுப்பாள். சூரிய பகவானுடைய வெப்பத்தைத் தாங்க முடியாமல் அவரை வணங்குவதுபோல, அவளுடைய இலைகளும், பூக்

களும், காய்களாகிய நாங்களும் வாடித் தொங்குவோம். எங்கள் பாட்டி பூமா தேவியைப் போலவே அவளும் மிகவும் பொறுமைசாலி. அண்ணே! அவள் சிகப்புப் பூக்களாலும் மஞ்சள் பூக்களாலும்நிறைந்த காற்றில் அசைந்தாடும்போது அவளழகை எவ்வளவு வர்ணித்தாலும் போதாது. எங்களைத் தன் கையாகிற இலைகளால் தடவிக் கொடுப்பாள். ஆகா! அந்த சுகத்தை என்னவென்று சொல்வேன். இப்படி மாதக் கணக்காய் நாங்களெல்லோரும் சௌக்யமாயும் சந்தோஷமாயும் இருந்து வந்தோம். ஆனால் உயிருள்ளவரையில் ஆசையை விடாத மனிதனிருக்கிறானே, அவன் எங்களை யெல்லாம் தாயை விட்டு நீக்கினான். எங்களுடைய மேல் தோலியை உரித்தான். பல ரகமுள்ள சகோதரர்களான எங்களெல்லோரையும் பல விலைக்கு விற்று மேல் தேசத்திற்கு அனுப்பினான். கப்பலில் சென்று ரயிலில் சென்று துறைமுகத்தில் பல நாள் கிடந்து கடைசியில் ஒரு ஆலைக்குச் சென்று மின்சார வேகத்தினால் தாக்கப்பட்டு பல ஹிம்சைகளுக் குள்ளாகி பலவித வர்ணங்களுக்குள் புகுந்து மூச்சுத் திணறித் திணறித் தவித்தேன். ஐயோ! வெள்ளையர்களின் கையிலகப்பட்டு நான் பட்டினி கிடந்து பட்ட கஷ்டங்களை நினைக்க நினைக்க, மனம் தாள வில்லை. ஈவிரக்கமற்ற மனிதன் தன் கஷ்டத்தை வருணிக்கும்போது "காற்றிகப் பட்ட பஞ்சு போல" என்கிறானே அது உண்மைதான். அது போலவே பறந்துபோய் விட்டேன். இதற்குள்ளாக இந்நாட்டைத்தான் பண வருவாய்க்கு ஒரு மார்கெட்டாக வைத்துக்கொண்டிருக்கும் வெள்ளையன் தான் வாங்கின விலையின் கூட பத்து பங்கு விலையைச்சேர்த்துத் திரும்பவும் என்னை என்ஜன்ம தேசத்திற்கு அனுப்பினான். எனக்கு ஒரு விதத்தில் சந்தோஷமாயிற்று. எவ்வளவு கஷ்ட பட்டாலும் நம் ஜன்ம தேசத்தை யடைந்து, ஒரு விதத்தில் நமக்கு சத்துரு வானாலும், மற்றொரு விதத்தில் நாம் பிறந்த புண்ய பூமியில் பிறந்து வசிக்கும் மனிதவர்க்கத்திற்கு உடையாகிறோமே என்கிற சந்தோஷத்தினால் புளகாங்கித மடைந்தேன்." என்று சொல்கிற பொழுது அதன் தொண்டை யடைத்துக் கொண்டது போலத் தோன்றிற்று. விம்முகிற சப்தமும் கேட்டது. திரும்பவும் "இல்வம் பஞ்சண்ணே! இப்பொழுது நான் ஒரு விஷயம் கேள்விப் பட்டேன். அதைக் கேள் உனக்கும் அது ஒரு சந்தோஷ வார்த்தை என்ன வென்றால், இனி இந்தியாவிலேயே பிறந்து, இந்தியரின் சுக துக்கத்திற்காகத் தன்னைக் கடவுள் படைத்திருக்கிறாரென்று எண்ணி, அஹிம்சா தத்துவத்தை இந்த அடிமை மனிதனின் மனதில் நிலை நாட்டி, அவனைத் தூக்கத்திலிருந்து தட்டியெழுப்பி, "அனியாயமாக உன் தாய் நாட்டில் பிறந்த உன் சகோதரனை பிறதேசத்திற்கு அனுப்பிப் பல சித்திரவதைக்கு ஆளாக்காதே. இங்கேயே அதைக் கொட்டை நீக்கி நீயே யடித்து, மின்சார வேகத்தில் அதன் ஜீவசக்தியை இழுக்கச் செய்யாமல், உன் கையினாலேயே ராட்டையில் நூற்று, துணியாக நெய்வித்து சாயம் போடுவித்துக்கொள். அதற்காக உன் சகோதரனை அடிமையாகச் செய்யாதே" யென்று இருபது வருஷ காலமாக உபதேசம் செய்து வருகிறார் ஓர் மகாத்மா, அண்ணே! என்ன இருந்தாலும் இந்தச் சுயநல மனித வர்க்கம், ஆத்ம கௌரவ மில்லாமல், தன்னம்பிக்கை யில்லாமல் ஏழைகளுக்கு நேர்முகமாக நம் பணம் போகிறதே யென்கிற எண்ணமில்லாமல் இன்னமும் வெள்ளையர்களின் சாயத்தில் மயங்கி வருகிறது. அப்படி யில்லாவிடில் திருப்பூர், சேலம், கோயமுத்தூர் ராஜபாளையம் முதலிய இடங்களில் லக்ஷக்கணக்காக கதராகப் பிறவி யெடுத்திருக்கும் நம் சகோதரர்கள் குவிந்து கிடப்பார்களா? ஏழைகளைத் தவிக்க விடுவார்களா? சிலநாட்களாக மறுபடியும் காந்தி சிஷ்யர்கள் நம்மைப்பற்றி ஜனங்களின் மனதில் ஓர் எழுச்சியை உண்டு பண்ணி வருகிறார்கள். 'ஊர் ஊராய் நம்மைத் தூக்கிக் கொண்டு அலைகிறார்கள்; அண்ணே! அண்ணே! ஏன் துக்கப்படுகிறாய்? அவனுக்கு விடுதலை கிடைத்து விட்டதே நமக்குக் கிடைக்க வில்லையே யென்கிறாயா? துக்கப் படாதே, நான் சொல்வதைக்கேள். உன் இனத்தாரால், உன் தாய் நாட்டில் நூல் நூற்கப்பட்டு நெய்யப்பட்ட உன் சகோதர தலையணை உரைக்குள் இருப்பதாக சந்தோஷப்படு. மகாத்மா காந்தியின் உபதேசத்தை மனதில் நினை. மனிதர்களில் பெரியோர் "இருந்தாலும் இறந்தாலும் ஒருவனுக்கு உபகாரமாக இரு" என்று சொல்லி யிருப்பதை எண்ணிப்பார்" என்றது. அவ்வளவு தான். 'மகாத்மா காந்திக்கி ஜேய்!' என்ற சந்தோஷ ஆரவாரம் என் காதைத் துளைத்து விட்டது. நான் உணர்வற்றவன் போலிருந்தேன்.

---

# வாழ்க்கைப் புயல்

"வஸந்தன்"

நமது வாழ்க்கைக் கடலில் திடீரென்று பல சமயங்களில் புயற்காற்று வீசுகிறது. அப்போது சில மரக்கலங்கள் நிலைகுலைந்து மூழ்கிப்போகின்றன. கொடிய புயலுக்குத் தப்பிப் பிழைக்கும் மரக்கலங்களை புனர் ஜன்மம் பெற்றவை யென்றே கூறலாம். அந்த மரக்கலத்தில் இருந்தவர்கள் அந்த சமயத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் ? எவ்வளவு சாமர்த்தியமாக மாலுமிகள் பாடுபட்டிருப்பார்கள்? புயல் ஓய்ந்ததும் அவர்களுக்கு எவ்வளவு பேருவகையும் மனக்கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்கும்? புயலிலகப்பட்ட மரக்கலத்திலுள்ளவர்களின் மனோயெழுச்சிகள் நம்மைப்போலக் கரையிலுள்ளவர்களுக்குத் தெரியாது. அதேமாதிரி, வரதராஜனின் வாழ்க்கைக் கடலில் ஏற்பட்ட புயற்காற்றையும் அவன் அடைந்த வேதனையையும், பிறகு அவனுக்கு ஏற்பட்ட அமானுஷ்ய சாந்தியையும் பற்றி யாருக்குத் தெரியும் ? அவன் என்னிடம் இந்த அபூர்வ சம்பவத்தைக் கூறியிராவிட்டால் அது பரம ரகஸ்யமாகவே இருந்திருக்கும். ஆனால் பாவம், அதை என்னிடம்—என் சுபாவத்தை அறிந்திருந்தும்—சொல்லி விட்டான் !

* * *

வரதராஜன் வாழ்க்கையில் எவ்வளவோ ஆச்சரியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஏன், அவன் செய்யும் ஒவ்வொரு காரியமும் மகா பிரமிப்பையும் மயக்கத்தையும் அளிக்கக்கூடியது. உண்மையில் அவன் கூரிய கத்தியை எடுத்து ஓர் பெண்ணின் சதைக்குள் செலுத்துவதை அன்று பார்த்தேன். அப்படியே நான் மயங்கி விழுந்தேன். ஆனால் வரதராஜன்-இராதகன்—கொஞ்சங்கூட பயமோ நடுக்கமோ இல்லாமல் வேலையை முடித்து 'பாண்டேஜ்' போட்டான்! ஆமாம்! அவன் ஒரு டாக்டர் ; கொஞ்சம்கூட அவனுக்கு ஈவு இரக்கம் இல்லை. அப்படி ஆபரேஷன் செய்வான்.

டாக்டர் ராஜன் படிப்பிலோ பேச்சிலோ அவ்வளவு ஒன்றும் கெட்டிக்காரனல்ல. நாங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போது அவனை 'மக்குப் பிளாச்சு' என்று தான் கூப்பிட்டு வந்தோம். நாங்கள் அவனைக்கேலி செய்வதற்காக அவன் ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட்டான். எருமை மாட்டு முதுகில் மழை பெய்தது போல நாங்கள் சொல்லுவதற் கெல்லாம் ஒரு புன்சிரிப்புச் சிரிப்பான். பையன்கள் எவ்வளவு கேலி செய்தும் உபாத்தியாயர்கள் எவ்வளவோ கோபித்துக்கொண்டும் கலங்காமலிருந்த அவன் மனச் சித்தம் பிற்காலத்தில் இந்த வழியில் உதவிசெய்யு மென்று நான் எதிர்பார்க்கவில்லை.

ராஜன் எல். எம். பி. பாஸ் பண்ணி விட்டு வாசலில் போர்டு தொங்கவிட்ட போது அவனுக்கு 30 வயது இருக்கும்; அவ்வளவு சாவகாசமாக அவன் உத்தியோக பர்வத்தை ஆரம்பித்தான். தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பற்றி அவனுக்குச் சந்தேகம் கிடையாது. ஆகையால்தான் போர்டு எப்போது போட்டுக் கொண்டால் என்ன என்று இருந்து விட்டான்.

வரதராஜனின் வெற்றியைப் பார்த்த பிறகு ஒரு நாஸ்திகன் கூட "ஓஹோ! ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அது மனிதனை ஆட்டி வைக்கிறதே ஒழிய மனிதனால் ஒன்றும் ஆகிறதே இல்லை. இல்லாவிட்டால் வரதராஜன் வெற்றிக்கு என்ன காரணமிருக்கும்?" என்று சொல்லி உடனே ஆஸ்திகனாக மாறி விடுவான். ஆம்; வரதராஜனுக்கு எதிர்பாராத சில குணாதிசயங்களை எல்லோரும் கற்பித்தார்கள். அவனைக் கை ராசிக்காரன் என்றார்கள்; சிலர் மகா பண்டிதன் என்றார்கள். சில கெட்டிக்காரர்கள் "அதி

ருஷ்டசாலி" என்றார்கள். என் சம்பந்தப் பட்டவரை வரதராஜன் பழைய மக்குத் தான்!

*  *  *

வரதராஜன் சென்னையில் பெரிய டாக்டரானன். அதனால் அவன் கொடிய தண்டனைக்குள்ளானன். அவனுக்கு ஓய்வு கிடையாது; தூக்கம் கிடையாது. எப்போதும் அவன் கையில் கத்தியும் மருந்தும் கொண்டு மோட்டாரில் சுற்றிக் கொண்டே இருந்தான். வீட்டிலே அவனுக்கு ஒருவருமில்லை; அவன் ஒரு அனாதை. ஆகையால் அவன் நிலைமையைக் கண்டு பரிதாபப் படுகிறவர்கள் ஒருவருமில்லை.

வரதராஜன் திட சரீரம் படைத்தவனானும் நாளாக ஆக அவன் செய்த உக்கிரமான வேலையும் ஓய்வின்மையும் அவன் நரம்பை அதிர்க்கத் தொடங்கின.

ஒருநாள் என்னிடம் சொன்னன்:

"ஏய்! இந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. இந்த உலகம் எனக்கு வரட்சையாகத் தோன்றுகிறது. எப்போது பார்த்தாலும் இப்படி ஆபரேஷன் செய்து எனக்கு பயித்தியம் பிடித்துப் போய்விடும்போ லிருக்கிறது."

"அப்போது ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பயித்தியம் பிடித்தால் ஓய்வு கிடைக்கும். அப்புறம் பயித்தியம் தெளிந்ததும் மறுபடியும் ஆபரேஷன் செய்ய ஆரம்பிக்கலாம்" என்றேன்.

"இப்போது உன் நாக்கை ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. ஆமாம், பின்னே, முக்கியமாக ஒரு கேள்வி கேட்கும்போது விகடம் பண்ணுகிறாயே?" என்று கோபித்துக் கொண்டான். (இப்போது வரதராஜன் கோபித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டான்.).

"என்ன ராஜு! அசட்டுப் பிசட்டுனு உளறுகிறாயே! வாழ்க்கை ஏன் வெறுத்துப் போச்சு?" என்று ரொம்ப வினயமாக நான் கேட்டேன். வரதராஜன் — பெரிய டாக்டர், ஆபரேஷன் செய்வதிலே கெட்டிக்காரன் — என் நாக்கை அறுப்பதாகச் சொல்லும் போது நான் இனிமேல் விளையாடக் கூடாதல்லவா?

"இல்லை, அம்பி! என்னால் ஒரு நாள் பட்டணத்தில் சும்மா இருக்க முடியுமா? பெங்களூர் பக்கம் போவோம், அங்கே இரண்டு மாதம் இருந்துவிட்டு அப்புறம் வேண்டுமானால் பாழும் பட்டணத்திற்கு வரலாம், வா" என்றான்.

*  *  *

பங்களூரில் நாங்கள் ஓர் பங்களாவில் தங்கினோம். அப்போதுதான் வரதராஜன் சரிதையில் முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது.

நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஓர் மங்களூர்க்காரர் இருந்தார். அவர் அடிக்கடி எங்களிடம் வந்து பேசிக் கொண்டிருப்பார். நாங்கள் வந்த ஒரு வாரத்திற் கெல்லாம் அவருடன் நாங்கள் பரம சிநேகம் கொண்டோம். வரதராஜன் வெளியே போயிருக்கும் வேளையில் அவர் வந்து, "ஸார்! மிஸ்டர் வரதராஜன் எங்கே?" என்று கேட்பார்.

"இல்லை, வெளியே போயிருக்கிறார்" என்றதும் அவர் திரும்பிப் போய் விடுவார். வரதராஜன் அவர் ஒரு வேளை வராமல் போனால் மெதுவாக அடுத்த வீட்டுக்குப்போய் விடுவான். "இந்த இரண்டு பேருக்கும் இப்படி பிராண சிநேகிதம் ஏற்படுவானேன்?" என்று நான் ஆச்சரியப் படவில்லை. ஏனென்றால் அது நான் எதிர் பார்த்தது தான்.

அந்தக் கிழவருக்கு விலாஸினி என்று ஓர் பெண் இருந்தாள். அவளை நாங்கள் முதல் நாள் பார்த்ததும் நடந்த சம்பவம் எனக்கு ஞாபக மிருக்கிறது. அப்போது விலாஸினி வாசற்படியண்டை நின்று கொண்டிருந்தாள் — நாங்கள் இருவரும் உலாவிவிட்டு வீடு திரும்பும் போது. நாங்கள் திரும்பி அவளைப் பார்த்தோம். ஒரு கணம் பிரமித்தேன் அவள் அழகைப் பார்த்து. அவள் தன் நீலக் கண்களால் வரதராஜனைப் பார்த்தாள்—அருகிலுள்ள என்னைக் கொஞ்சம் கூட லக்ஷியம் செய்யாமல்! பிள்ளையாண்டான் அப்போது எந்த நிலைமையில் இருக்கிறான் என்று தெரிந்து கொள்ள நான் அவனைப் பார்த்தேன். அதே சமயத்தில் அவனும் என்னைப் பார்த்தான்! அந்த சமயத்தில் அவன் முகத்தில் கண்ட உணர்ச்சி

வெள்ளத்தைப் பார்த்து சற்றுத் தடு மாறினேன்.

கருங்கல் போன்று உணர்ச்சியற்ற அவன் முகத்தில் சலனம் உண்டாயிருக் கது. வரதராஜன் எவ்வளவோ அழகி களைக் கண்டிருக்கிறான். அப்போதெல் லாம் அவன் மனம் சலனமடைய வில்லை. ஆபரேஷன் செய்து உணர்ச்சியற்றுப் போயிருந்த அவன் முகத்தில் ஒருவித மாறுதலும் உண்டாகும் வழக்கம் இல்லை. ஆனல் இன்று முதன் முதலாக அவன் முகத்தில் புயல் வீசியதைக் கண்டேன். மேற்சொன்ன விஷயங்கள் ஒரே விஞடி யில் நடந்தவை. மறு விஞடி நாங்கள் வீட்டுக்கு வந்து விட்டோம்.

“ஏண்டா அம்பி, அந்தப் பெண்ணைப் பார்த்தியா? அவள் மனுஷியா, தேவதை யாடா?” என்ருன் வரதராஜன் உள்ளே வந்ததும். அவன் அலங்காரத்திற்காக அப்படிக் கேட்கிறவனல்ல. உண்மையில் ஏதாவது சந்தேகம் தோன்றினல் அப்ப டிக் கக்கி விடுபவன். அன்று நிஜமாகவே அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அவ னுக்கு அச்சந்தேகம் ஏற்பட்டது.

“தேவதை எதற்காக பங்களூருக்கு வரு கிருள்? கைலாஸ மலை எப்போதும் ‘குளு குளு’ வென்று இருக்கும் போது அதை விட்டுவிட்டு இங்கே ஒன்றும் வராள். மேலும், நாம் இருக்கிற இடத்தில் எந்த தேவதையடா வரப்போகிருள்?”

“இல்லே, அம்பி! இவ்வளவு அழகாக உலகத்தில் ஒரு பெண் உண்டா? நம்ப பக்கத்திலே இவ்வளவு அழகாக ஏன் ஒரு வருமில்லை?”

“நம் ஊர்களிலே இருக்கிறதுகளெல் லாம் அவதாரங்களாகத்தான் இருக்கும். ஆனல் இவள் மங்களூரைச் சேர்ந்தவளா கையால் மிகவும் அழகாயிருக்கிருள்!” என்னுடைய சமாதானத்தில் வரதராஜன் திருப்தி யடைந்து ‘அவள் தேவதை’ என்ற எண்ணத்தை விட்டு விட்டான்.

“அம்பி! அவள் என்னையே பார்த் தாளே, நீ கவனித்தாயோ?” என்று கேட்டான். நான் அந்த சமயத்தில் எனக்கு எவ்வளவு துயரம் உண்டாகும் என்பதைப்பற்றி அவன் நினைக்கவில்லை!

“நான் கவனிக்க வில்லையே, அப்பா!” என்றேன்.

என் பதிலில் அவன் ஏமாற்ற மடைந் தான்.

“நீ பார்க்கலே?” என்று பரிதாபமாய்க் கேட்டான்.

“இல்லவே, இல்லே!” என்று இரக்க மில்லாமல் பதில் சொன்னேன்.

வரதராஜன் விலாஸினியைப் பார்த்த நிமிஷத்திலிருந்து அமைதியை இழந்து விட்டான். யோசனை செய்யவே இது வரை தெரிந்து கொள்ளாத அவன் யோசனையில் ஆழ்ந்து விட்டான். “ஏண் டா, அம்பி! அவள் என்னைக் கலியாணம் செய்து கொள்வாளோ?” என்று ஒரு சம யம் கேட்பான். மற்ருெரு சமயம் “அவள் மங்களூர்க்காரியாச்சே! கல்யா ணம் செய்து கொள்ளலாமோ?” என்று கேட்பான். அவன் நிலையில் எனக்கு மிக வும் பரிதாபம் உண்டாயிற்று. பாவம், மன அமைதிக்காக வரதராஜன் பங்களூ ருக்கு வந்தான். கடைசியில் இருக்கிற அமைதியைக்கூட இழந்து விட்டானே என்று இரக்கம் ஏற்பட்டது.

“வாழ்க்கை பாலைவனமாகப் போய் விட்டது” என்று அவன் முன்பு சொன் னது ஞாபகத்திற்கு வந்ததும் எப்படி யாவது வரதராஜன் விலாஸினிடைக் கல் யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. பக வான் அருளால் இந்தக் காதல் கலியாணம் நிறைவேறவேண்டும். அதற்குப் பிறகு வரதராஜன் வரண்ட வாழ்க்கையில் இளஞ் செடிகள் முளைத்து நறுமலர்கள் பூக்கப்போ கின்றன. அதன் மணத்தை நான் அனு பவிக்கலா மல்லவா? வரதராஜன்—ஓர் அற்புதப் பிறவி, கள்ளங்கபடற்றவன், பரிசுத்தமானவன்—இந்த உலகத்தில் சந் தோஷமாக வாழமுடியவில்லை யென்ருல் வேறு யாருக்குத்தான் வாழ உரிமை இருக்கிறது? அவன் விலாஸினியைக் கலியாணம் செய்துகொள்ள முடியவில்லை என்ருல் மனமுடைந்துபோவான். என் னல் இக்கலியாணத்தை முடித்துவைக்க என்ன செய்யலாமோ அதைச் செய்ய முற்பட்டேன்.

எனக்கு அப்படிப்பட்ட சிரமம் கொடுக்காமலே ஊழ்வினையால் சம்பவங்கள் தொடர்ந்தாற்போல் வெகு சீக்கிரத்தில் நடக்க ஆரம்பித்தன. விலாஸினியின் தகப்பனர் வரதராஜனைத் தேடிக்கொண்டு வருவார் என்று சொன்னேனல்லவா? அப்படியிருக்கும்போது நான் ஏன் சிரமப்பட வேண்டும்? நான் எதிர்ப்பார்த்தபடி வரதராஜன் பேரில் அவருக்கு மிகவும் பற்று ஏற்பட்டு விட்டது. ஆஜானுபாகுவாய், முகத்தில் தேஜஸ் உள்ள ஓர் வாலிபன் பேரில் யாருக்குத்தான் பற்று உண்டாகாது? அவன் பட்டணத்தில் பெரிய டாக்டர், சிறுவயதிலேயே இவ்வளவு சம்பாதிக்கிறவன். மேலும், தன் பெண்ணைக் கண்டு 'அசட்டுப் பிசட்டெ'ன்று நடந்து கொண்டுவிட்டான்—இவைகளெல்லாம் தெரிந்துகொண்டபிறகு எந்த மனுஷர்தான் பேசாமல் இருப்பார்?

அதிகம் சொல்வானேன், சில வாரங்களுக்கெல்லாம் கல்யாணம் நடந்தது. வரதராஜன் புது மனிதனுய் இன்பக் கனவுகள் கண்ட வண்ணம், தன் இளம் மனைவியுடன் சென்னைக்கு வந்து புது அத்தியாயத்தை ஆரம்பித்தான்.

வரதராஜன் இனிமேல் புது மனிதன் தான். அவன் மண வாழ்வு ஆனந்தமாய் இருக்கப்போகிறது. இனிமேல், 'வரண்ட பாலைவனம்' என்று சொல்லமாட்டான். வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கண்டறியாத அவன் இனிமேல்தான் அதை அனுபவிக்கப் போகிறுன். இனிமேல் அவனுக்கு என்ன குறைவு?

இப்படியாக எண்ணி சந்தோஷப்பட்டேன். அந்த சந்தோஷத்தில் நான் இருந்துவிட எண்ணி நான் வரதராஜன் வீட்டுக்குப்போவதை நிறுத்திக்கொண்டேன். மேலும், புது வாழ்க்கை ஆரம்பித்த கிரஹஸ்தன் வீட்டுக்கு நான் எதற்காகப் போகவேணும்?

ஆறுமாத காலம் ஆன பிறகுதான் அந்தக் கொடிய புயல் வீச ஆரம்பித்தது. அது எத்தகைய புயல்? வரதராஜா! நீ ஒரு பாவி!

அன்று சாயங்காலம் வரதராஜன் என்னை டெலிபோனில் கூப்பிட்டான். "அம்பி! ஓடிவா சீக்கிரம்! நான் இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்றுன்.

"உனக்குப் பயித்தியம் பிடித்து விட்டதா என்ன?" என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

அவன் "டக்" கென்று டெலிபோனை வைத்துவிட்டான்.

நான் அவன் வீட்டுக்குப் போனபோது உண்மை விளங்கிற்று. விலாஸினி கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தாள். உடம்பில் நாலைந்து இடங்களில் கட்டுப்போட்டிருந்தது. துரும்பாய் இளைத்துபோய் விட்டாள்! பழைய தேவதையா அவள்? முன்பிருந்த அழகும், சோபையும் எங்கேயோ போய்விட்டதே? எவ்வளவு பெரிய மாறுதல்?

"என்னடா து, என்ன? இந்தக்கொடுமை என்னுல் சகிக்க முடியுவில்லையே. அவளுக்கு என்ன உடம்பு?" என்று பதறிக் கேட்டேன்.

"இங்கேவா!" என்று என்னை ஹாலுக்கு அழைத்துக்கொண்டு போனுன். "ஏய், அம்பி! என்ன துர்பாக்கியமடா எனக்கு? மூன்று மாதமாய் அவளுக்குக் கட்டி புறப்பட்டு அவளை இப்படி அடித்து விட்டது. ஒரு கட்டியை ஆபரேஷன் செய்தால் மற்றொன்று புறப்படுகிறது. என் வைத்தியத் திறமையைப் பூராவும் காண்பித்து விட்டேன், அம்பி! ஒன்றும் பலிக்கவில்லை. அவள் மூன்று மாதமாக யமனுடன் போராடி வருகிறுள். அம்பி! நான் கட்டியிருந்த மனக் கோட்டை தகர்ந்து போய் விட்டது. நான் கண்ட கனவு பகற் கனவாகி விட்டது. அவளுக்கு இந்த வியாதி சொஸ்தமாகாது என்று அறிவேன். நான் என்ன பண்ண, அம்பி? வாயைத் திறந்து சொல்லேன். அவள் என்னை வேறு கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி விட்டாள். அம்பி, அம்பி" என்று கூறி நிறுத்தினுன். துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

* * *

வரதராஜனின் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளவும், ஆண்டவனின் லீலா வினேதங்களைக் காணவும் நான் மறுவாரம் அவன் பங்களாவுக்குப் போனேன். அவன் அப்போது படுக்கையில் படுத்துக்கொண்

டிருந்தான்: அவன் அருகில் நர்ஸுகள் உட்கார்ந்து சிசுருஷை செய்து கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா? என்னடாது? உனக்கு என்ன உடம்பு?" என்று நிலை குலைந்தவனாய் திடுக்கிட்டுக் கேட்டேன்.

என் குரலைக் கேட்டு வரதராஜன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் முகம் வெளுத்திருந்தது. ஆனால் அதன் முகத்தில் ஒரு தேஜஸ் இருந்தது. அவன் கண்களில் கொடிய பிரகாசம் வீசியதைக் கண்டேன்.

"ஐயோ! உனக்கு ஒரு நாளும் உடம்புக்கு வந்ததே இல்லையே. இது என்ன..." என்று ஆரம்பித்தேன்.

"எனக்கு நாலு நாளாய்க் காய்ச்சல், நேற்றுத்தான் தேவலை. உன்னை வரச் சொல்லுவோம் என்றிருந்தேன். நல்ல வேளையாக நீயே வந்து விட்டாய்" என்றான்.

"உடம்பு குணமாகி விட்டதல்லவா, அது தானே வேண்டியது. நல்ல வேளையாய்ப் போச்சு!" என்றேன்.

"உடம்புக்கு வந்ததே நல்ல வேளைக்குத்தான், அம்பி. அதனால் எனக்கு ஞானோதயம் உண்டாயிற்று. தேக சௌகரியமும் அசௌகர்யமும் நாமாக வருவித்துக் கொள்வதல்ல. நமது பாவ புண்ணியத்திற்காக பகவானால் கொடுக்கப்படும் தண்டனை. அதிலிருந்து தப்பிக் கொள்ள யாராலேயும் முடியாது அம்பி. நான் ஒரு டாக்டர். எவ்வளவோ முன் எச்சரிக்கையுடன் உள்ள எனக்கு நோய் வந்து விட்டதல்லவா? இங்கே பார், விலாஸினிக்கு உடம்புக்கு வந்தது கூட ஓர் தண்டனைதான். அந்த தாத்பரியத்தை நான் அறிந்து கொள்ளாமையால் சுயநல எண்ணத்தால் அவளுக்குப் பாதகம் நினைத்தேன். என் மிருக சுபாவத்தை இந்த காய்ச்சல் இடித்துக் காண்பித்து எனக்கு புத்தி கற்பித்தது, அம்பி" என்று உணர்ச்சியுடன் கூறினான். அவன் முகத்தில் தோன்றிய பேரொளியைக் கண்டு ஒரு கணம் பிரமித்தேன்.


"வரதராஜா, உனது கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து போகும். கவலைப்படாதே" என்றேன்.

அந்த சமயத்தில் விலாஸினி உள்ளே வந்தாள். இளைத்து உருமாறிப் போயிருந்த போதிலும் கண்களில் சோபை இருந்தது.

"ஏன் நடந்து வந்து உடம்பை அலட்டிக் கொள்கிறாய்?" என்று கேட்டான் வரதராஜன்.

"இல்லை! உடம்பு எப்படி யிருக்கிறதென்று பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றாள். சட்டென்று வரதராஜன் என்னைப் பார்த்தான். அவன் முகத்தில் தோன்றிய உணர்ச்சிப் புயலை அடக்க எத்தனித்தான்.

இப்போது ஆயிரம் மைல்களுக்கப்பால் இருவரும் புது வாழ்வு நடத்துகிறார்கள். வாழ்க்கைப் புயல்களில் அடிபட்டதால் அவர்கள் வாழ்வு இன்னும் ஒற்றுமைப் பட்டிருக்கிறது; பரிசுத்த மடைந்திருக்கிறது.



# கெர்ஸப்பா நீர்வீழ்ச்சி

(ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்)

இந்த அற்புதமான நீர்வீழ்ச்சியானது மைசூர் சமஸ்தானத்திலிருக்கும் சிவமொக்கா ஜில்லாவின் தலை நகரமான சிவமொக்கா நகரிலிருந்து 60 மைல்கள் தூரத்திலிருக்கிறது. சிவமெக்காவிலிருந்து இவ்விடத்திற்குச் செல்லும் மோட்டார் பஸ், வண்டி முதலியவைக்கு போக்கு வரத்துக்கான ரஸ்தாவின் இருபுறமும் பெரும்பாலும் வனதேவதையானவள் பூர்ண சௌந்தரியத்துடன் விளங்குகிறாள். பச்சைப்பசேலென்று ரத்தினக் கம்பளம் விரித்தால் போன்ற புல்லும், அங்கங்கு கண்ணுக்கெட்டும் தூரம் வரைக்கும் செழிப்பாக வளர்ந்த நெல் வயலின் அற்புதத் தோற்றமும், வெற்றிலைத் தோட்டங்களும், கானகத்தின் புஷ்பச் செடி கொடிகளும், புதரும், ஆகாயத்தைத் தொடும் அளவு அதி உயரமான மரங்களும் அடங்கிய அடர்ந்த கானகங்களும் மாறி மாறித் தென்பட, நாம் ஓர் புது உலகத்தில் தான் செல்கிறோமோ என்று ஐயம் கொள்ளுமாறு மிக அற்புதக் காட்சியாக விருக்கின்றது. இந்தக் கானகங்களில் கிளி, மைனா, குயில் முதலிய பல அழகிய பக்ஷிகள் கானம் செய்வதையும், சில சமயங்களில் மயில்கள் அழகாகத் தோகை விரித்தாடுவதையும்; கூட்டம் கூட்டமாக இருக்கும் கிளிகளையும், முயல், மான், நரி, காட்டெருமைகளையும், சில சமயங்களில் சிறுத்தைப் புலி, பெரும் புலிகளையும் கூட நம் பிரயாணத்தில் காணலாம். மிருகக் காட்சி சாலையில் கூண்டில் அடைபட்டிருக்கும் மிருக பக்ஷி வகைகளின் தோற்றத்தை விட இவ்வழகிய கானகத்தில் சந்தோஷத்துடனும், சுதந்திரமாகவும் துள்ளிக்குதித்துக் கொண்டு திரியும் இந்த மிருக பக்ஷி வகைகளைப் பார்க்க பதின்மடங்கு அழகாக இருக்கிறது. இயற்கை அன்னையின் அழகைப் பருகிய வண்ணம் அங்கங்கு சில கிராமங்களையும், கானகங்களையும் கடந்து (சிவமொக்காவிலிருந்து) 30 மைல்கள் சென்றால் ஆனந்தபுரம் என்னும் ஊரை அடைவோம். இவ்விடத்திலிருந்து 15 மைல்களுக் கப்பால் சாகர் தாலூகாவின் முக்கிய நகரம் இருக்கிறது. சந்தனக் கட்டையில் வெகு அழகாகச் செதுக்கப்பட்ட விக்கிரகங்களும், சித்திரங்களும் செய்வதில் நிபுணர்களென்று பிரஸித்தி பெற்றிருக்கும் "குடிகார்" (Gudigar) என்ற இனத்தினர் வசித்து வருகிறார்கள். சாகர் வரைக்கும் ரயில் பாதைகூட இருக்கிறது. ஆனால் அனுகூலமுள்ளவர்கள் ரயில் வண்டிக்குப் பதில் சிவமொக்காவிலிருந்து நெடுக கெர்ஸப்பா நீர்வீழ்ச்சி வரைக்கும் பஸ்ஸிலோ அல்லது மோட்டாரிலோ செல்வதுதான் அழகான வழி.

நீர்வீழ்ச்சியை அணுக, அணுக மலைச் சாரல்களில் ரஸ்தா வளைந்து வளைந்து செல்கின்றது. இந்த 60 மைல்களை ஆனந்தமாகக் கடந்தவுடன் ஷராவதி நதியை அணுகுகிறோம். நீர் வீழ்ச்சியின் வடிவத்தை அடையு முன்னர் இந்த அம்மனை நாம் இவ்விடத்தில் அதிக சாந்தமாக ஓடிக் கொண்டிருப்பதைத் தரிசிக்குங் கால் அதிக ஆச்சரிய முண்டாகிறது. நதியின் அகலம் 750 அடிகள் இருக்கிறதால் இதை நாம் தெப்பத்தின் மூலம் கடந்து அக்கரையைச் சேர வேண்டும். மோட்டார், பஸ், மாட்டு வண்டி, சாமான்கள் அனைத்தையும் அக்கரை கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு அனுகூலமாகவே இரண்டு மூன்று படகுகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, அதன் மேல் மூங்கிலினால் அகலமான தட்டி கட்டி தெப்பம் செய்திருக்கிறார்கள். இந்தத் தெப்பத்தின் மேல் மோட்டாரை ஏற்றி அக்கரைக்குச் செல்வது வெகு வேடிக்கையாக இருக்கிறது. மழை காலத்தைத் தவிர்த்து மற்ற சமயங்களில் படகோட்டுவதற்கு நதி மிகவும் அனுகூலமாகவே இருக்கிறது.

இவ்விடத்தில் தான் நதியை நீர்வீழ்ச்சியிலிருந்து கொஞ்சம் தடுத்து மின்சார

விசை எடுப்பதற்காக மைசூர் சர்க்கார் சமீபத்தில் வேலை துவக்கியிருக்கிறார்கள். மைசூர் சமஸ்தானத்தில் இது இரண்டாவது மின்சார உற்பத்தி ஸ்தானமாகும். இந்த மின்சாரதிட்டம் நிறைவேறுங்கால் மைசூர் தேசத்திற்கு வேண்டியளவு மின்சார சக்தியை உபயோகித்துக் கொண்டு மற்றதை பம்பாய் மாகாணத்திற்கு விற்கப்படுமாதலால் இந்த திட்டத்தினால் மிகவும் பயனேற்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

நீர்வீழ்ச்சி நதியைக்கடந்து அக்கரைக்குச்சென்றால் அவ்விடத்திலிருந்து இரண்டு மைல்கள் தூரத்திற் கப்பால்தான் நீர் வீழ்ச்சியின் தோற்றத்தைக் காணலாம். நீர்வீழ்ச்சியின் எதிர்ப்புறத்தில் மைசூர் சர்க்கார் ஓர் அழகிய பங்களாவைக் கட்டி இருக்கின்றனர். இந்த பங்களாவைச் சமீபிக்க சமீபிக்க நீர்வீழ்ச்சியின் சப்தம் படிப்படியாகத் தெளிவாகக் கேட்க ஆரம்பிக்கின்றது. மைசூர் பங்களாவின் வாயில் புறம் நின்றுகொண்டு முன்புறம் நோக்குங்கால் நமக்கும் உலகின் அதியற்புதமான இயற்கை யன்னையின் தோற்றத்தில் ஒன்றாகிய இந்த நீர்வீழ்ச்சிக்கும் நடுவில் ஓர் பெரிய பள்ளத்தாக்கைக் காணலாம். இந்தப் பள்ளத்தாக்கின் அக்கரையிலிருக்கும் நீர் வீழ்ச்சிக்கும் நாம் நின்றுகொண்டிருக்கும் இக்கரைக்கும் நடுவில் 600 அடிகள் தூரமிருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. நம் எதிரிலுள்ள பிரம்மாண்டமான நீர்வீழ்ச்சியை நோக்குங்கால் உடம்பு சிலிர்த்து, தன் உணர்ச்சி அற்றுப் போகிறது; இவ்வற்புதமான நீர் வீழ்ச்சியானது நான்கு பிரிவுகளாகப் பிரிந்து பாறைகளை உராய்ந்துக்கொண்டு 1000 அடிகளுக்கு கீழ் விழும் அற்புதத் தோற்றத்தை என்னென்று விவரிப்பேன்! கீழே விழுந்த ஜலப்பிரவாகம் மேற்குப் புறம் பாய்ந்து சென்று 18 மைல்களுக்கப்பாலிருக்கும் "கேர்லப்பா" என்னும் கிராமத்தை அணுகி, அவ்விடமிருந்து 32 மைல்களுள் தூரம் ஓடிச்சென்று "ஹொன்னவர்" என்னும் இடத்தில் சமுத்திரத்தில் சேருகிறதாம். இந்தக் கிராமத்தின் பெயரைக்கொண்டுதான் நீர்வீழ்ச்சிக்கும் இப்பெயர் வழங்கப்படுகிறதாம். இதற்கு 'ஜோக் பால்ஸ்" என்ற மற்றொரு பெயரும் உண்டு.

நீர்வீழ்ச்சி விழும் பள்ளத்தின் (குளத்தின்) ஆழம் 130 அடிகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம். இந்த நான்கு நீர் வீழ்ச்சிகளில் மேற்குப் புறக்கடைசியில் மேலிருந்து கீழ்வரைக்கும் தங்குதடையின்றி ஒரே வீழ்ச்சியாகக் கொட்டும் வீழ்ச்சியானது "ராஜா" என்று அழைக்கப்படுகிறது. அதற்கடுத்தாப்போல் அரைவாசி தூரம் கண்ணுக்குத் தென்படாமல் பாறையின் பின்னால் வீழ்ந்து, அப்புறம் பலத்த சப்தத்துடன் ராஜா வீழ்ச்சியுடன் ஒன்று சேர்ந்து கொட்டும் வீழ்ச்சிக்கு 'கர்ஜிப்பவன்' என்றும், மூன்றாவதை ஆகாய பாணம்போல் வீழ்வதால் "ஆகாய பாணம்" என்றும் நான்காவதை "ராணி" என்றும் பெயரிட்டிருக்கின்றனர்.

உலகத்தில் மிகப் பெரிய தென்று அழைக்கப்படும் "நையாகரா" நீர் வீழ்ச்சியைக் காட்டிலும் இந்த நீர் வீழ்ச்சியின் அகலம் மிகக் குறைவானாலும் கூட "ராஜா" நீர் வீழ்ச்சியானது "நையாகரா"வைவிட ஐந்து மடங்கு உயரம் ஜாஸ்தி என்று சொல்லப் படுகிறது.

மழைக்காலத்திற் கடுத்தாப்போல் நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் இந்த கண் காக்ஷியைக்காண நல்ல சமயம். மழைக்காலத்திலோ ஜலம் அதிகரித்து நீர் வீழ்ச்சி முழுவதும் பனி மூடின மாதிரி தோன்று மல்லாமல், பூர்ணப் பிரவாகத்துடன் ஓடும் நதியைக் கடப்பதும் கஷ்டம். கோடை காலத்தில் ஜலக்குறைவால் நீர் வீழ்ச்சியின் அழகு மிகவும் குறைந்து போகும். ஆதலால் கிறிஸ்துமஸ் சமயத்தில் தான் இவ்விடம் வருவதற்கு மிகவும் அழகும், அனுகூலமுமாக விருக்கும். நீர் வீழ்ச்சியின் சுற்றுப்புறம் அழகிய தோற்றத்துடன் இருப்பதால் இயற்கையாகவே அதிக சௌந்தரியத்துடன் சோபிக்கும் நீர்வீழ்ச்சியின் தோற்றம் இன்னும் நூறு மடங்கு அதிக அழகுடன் சோபிப்பதைக் காண்கிறோம். நீர் வீழ்ச்சியின் நீர்த்துளிகளினால் ஏற்படும் ஏழு வர்ணங்களினாலும் வீழ்ச்சியினருகில் பாறைகளில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் (Rock

Pigeons) பறப்பதினாலும், இன்னும் இதன் அழகு அதிகரிக்கின்றது. இக்கரையில் மைசூர் பங்களாவும், அக்கரையில் பம்பாய் பங்களாவும், ரஸ்தாக்களும் தவிர்த்து மனிதனால் தொடப்படாத இவ் வியற்கை அன்னையின் தோற்றத்தின் அழகே அழகு! அதிலும் சூர்யாஸ்த மனத்தின் பொழுது நீர் வீழ்ச்சியின் ஜோபிப்பை என்னவென்று வர்ணிப்பது! நிலா வெளிச்சத்திலோ நுரைப்பால் கொட்டுவது போல் கண் கொள்ளாக் காக்ஷியாக விருக்கும். இந்த நீர் வீழ்ச்சியைப் பெரிய கனவான்கள் பார்க்க வருங்கால் இரவு காலங்களில் சர்க்காரால் நீர் வீழ்ச்சியின் ஆரம்பத்தில் பெரிய பெரிய வைக்கோல் சுமைகளையும், மத்தாப்புக்களையும் கொளுத்திப்போட்டு ஜலத்தை செயற்கை வெளிச்சத்தினால் அழகு படுத்துகிறார்கள். அந்தப் பெரிய புல் சுமைகள் ஜலத்துடன் சேர்ந்து கீழே விழும் பொழுது நமக்கு நக்ஷத்திர பிரமாணத்தில் தான் தோன்றும். நீர் வீழ்ச்சியின் பள்ளத்தாக்கிற்கு இறங்கிச் செல்வதற்கு படிக்கட்டுகள் இருக்கின்றன. அல்லாமல், பல வேறு இடங்களிலிருந்து (Various Views of the Falls) இந்தக் கண் காக்ஷியை கண்டு களிக்க வெண்ணிசலவைக் கற்களும் போட்டு அவ்விடம் செல்ல ரஸ்தாக்களு மிருக்கின்றன. மைசூர் பங்களாவில் சில நாட்கள் தங்கி இருப்பதற்கு வேண்டிய வசதிகளும் செய்திருக்கிறார்கள். நல்ல ஹோட்டல் ஒன்றும் கூட இருக்கிறது. இவ்விடம் வந்து இந்த வர்ணிக்க இயலாத வனப்புடன் கூடிய அற்புதத் தோற்றத்தைக் கண்டு களித்தாலன்றி இதன் மகிமையை உணர்வது அரிது.

---

## கட்டுரையாளருக்கு

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நமக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

# வரதக்ஷிணை

"கேஸரி"

(மாலை மணி 4 இருக்கும். திருமணித் தெருவில் தன் வீட்டு மாடியில் ஈஸி-சேரில் ரகுநாதய்யங்கார் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார். எதிரில் ஒரு முக்காலியில் பஞ்சாங்கம் விசுவநாதய்யர் அமர்ந்திருக்கிறார்.)

ரகுநாதய்யங்கார் :—கக்க வச்சூட்டேன். ஆம், ஊம்னு ஒன்றும் என்கிட்டே சாயல்லே! இரண்டாயிரத்தைநூறு ரூபாய் எடுத்து வச்சூடச் சொல்லிட்டேன்.

விசுவநாதய்யர்:—அது ஏன் அப்படி சொல்றீரே, அவன் உங்க பிள்ளைக்கு இரண்டாயிரத்தைனூறு கொடுக்கிறது அதிசயமான்னு?

ரகு:—அவன் அப்படிதாண்டா நெனைச்சுண்டிருக்கிறான்!

விசு:—நெனைச்சுண்டானு இருக்கட்டும். நீர் பேசாமே வந்துடாரதுதானே.

ரகு:—சே, சே, அப்படி எல்லாம் ரொம்ப பிகுவு பண்ணினால் நடக்காதுடா காரியம்.

விசு:—அது வாஸ்தவம் தான். நான் வெறுமனே சொன்னேன். அவன் என்ன சொன்னான்?

ரகு:—எங்கிட்டேயாவது அவன் சொல்றதாவது. மொதல்லே என்னமோ நாங்கள் எல்லாம் அவ்வளவு பணக்கார மனுஷ்யாள் இல்லையே, அப்படி இப்படி இன்னான். ஆனால் நான் என்ன சொன்னேன் தெரியுமா.

விசு:—எனக்குத் தெரியாதா? நீர் நன்னு அஞ்ஜூர் ஆணியாட்டம்தான் பதில் கொடுத்திருப்பீர்......எனக்குத் தெரியாதா?

ரகு:—எங்க பெண்ணுக்கு நான் என்ன செய்தேன் தெரியும்மா உங்களுக்குன்னேன்.

விசு:—ஊம். ஹே, ஹே, ஹே, அதான் சரி அதான் சொல்லி இருப்பேள்னு நெனைச்சேன்.

ரகு:—அதெல்லாம் நமக்கென்னத்துக்குன்னு அப்படின்னான்; ஆனால் நானா விடறவன்?

விசு:—ஊம், அப்பறம்?

ரகு:—ஜானுவாஸரத்துக்கு மாத்திரம் பாணவேடிக்கைக்காக இருநூற்றைம்பது ரூபாய் செலவழிச்சேன்னு சொன்னேன்.

விசு:—நன்னாப் போட்டேள். அடேயப்பா! எனக்கே வெலவெலத்துப் போறதே......அவாளுக்கு.

ரகு:—அவ்வளவுதான், அப்படியே ஆசாமி படுக்கையாகப் படுத்துண்டுட்டான்.

விசு:—சரிதான், நான்தான் சொல்றேனே, பாம் போட்டாப்பலே இருக்கும் இந்த வார்த்தை.

ரகு:—கேளேன் மேலே!

விசு:—அப்பறம் ஆள் பயந்து போயிட்டானா?

ரகு:—பயந்துதான் போயிட்டான். ஆனால் கொஞ்சம், ஒரு சிடிகைப் பொடி போட்டேன்.

விசு:—ஏது அவாள்கூட நம்மைப்போல பொடி போடரவாதானா? அப்போ நீங்கள் வரதக்ஷிணையிலேகூட ஒரு ஐந்நூறு ரூபாய் குறைச்சு இருக்கலாமே?

ரகு:—அட என்னடா விசுநாதா, இப்படி உளர்ரே?

விசு:—ஏன்? என்ன நான் உளர்ரேன்? பொடி போட்டேன்னு சொல்லலவே அவாளுக்குத்தான்! . . .

ரகு:—அடே போடா மடையா, சுக்குப் பொடி போட்டேண்டா!

விசு:—எடுத்துண்டு போயி இருந்தீளா? நான் என்னாலே ஆனமட்டும் குட்டுக்குடுப் பாண்டிக்கிட்டே இருந்து சுக்குப்பொடி வாங்கணும்னு பாத்தேன், எனக்குக் கிடைக்கல்லே. . . .

ரகு:—ஒன்னைப்போல மூளையத்தவன் கிட்டே பேசரத்தைக்காட்டிலும் எங்கேயாவது, எங்கேயாவதுன்னு, காஞ்சி

வரம் நாத்திக்கால் மண்டபத்துக்குப் போய் யாரும் இல்லாத பக்கமா இருக்கிற கம்பத்திலே முட்டிக்கலாம்.

விசு:—மண்டேன்னு ஒடையும்.

ரகு:—இப்போ ஒன்னோடு பேசச்சே மண்டை ஒடையல்லியா?

விசு:—கொஞ்சம் பயந்தாப்போல் பாவனையுடன் அப்படின்னு ஏமாத்திவிட்டேன்னு சொல்லுங்கோ.

ரகு:—ஏமாத்தறதாவது? என்ன தைரியம்டா உனக்கு?

விசு:—இல்லே, இல்லே. நானு உங்களை அந்த மாதிரி சொல்லுவேன். எங்கே யாவது பட்டணத்தில் உங்களைப்போல பணக்காரராக இருக்கிறவர்களை யாராவது ஏமாத்தின்னுன்னு சொன்னு அவன் மடையன்தான். நான் நீங்க ஏமாந்துட்டேளா என்று கேட்டேன்.

ரகு:—நன்னு சொன்னேடா! நன்னு சொன்னே, நான்தான் ஏமாறவன்?

விசு—(பல்லைக் காண்பித்தவண்ணம்) ஒத்தர் என்னு ஒத்தரை ஏமாத்தரது, நியாயப்படி நடந்தால்? அப்புறம் ரெண்டாயிரம் ரூபாய் தரேன்னுட்டாளா?

ரகு:—(உருட்டி விழித்துக்கொண்டு) ரெண்டாயிரமா?

விசு:—(அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு) ஹே! ஹே! மறந்துட்டேன். ரெண்டாயிரத்தைன்னூறு.

ரகு:—கொஞ்சம் கெஞ்சப்பாட்டுப் பாடினுன்னு சொன்னேனே ஞாபகம் இருக்கா?

விசு:—ஊம்! ஊம்!

ரகு:—"கையிலே ஆயிரத்தைன்னூறு ரூபாய்தான் பாக்கி யிருக்கு, கல்யாணச் செலவுக்கு வேண்டிய ரூபாய் போக" அப்படின்னு சொல்லி ஆயிரத்தைன்னூறு ரூபாய்தான் வரதக்ஷிணையாக வாங்கிக்கோங்கோ என்று வேண்டினுன்.

விசு:—அதெல்லாம் இதுக்கெல்லாம் மசியப்பட்டாதன்னு?

ரகு:—எனக்கு தெரியாதான்னு இந்த லாவுகள் எல்லாம்!

விசு: அதானே நானும் சொல்றேன்.

ரகு:—(தாழ்வாரத்திலிருந்து பையன் தன்னை நோக்கி வருவதைப் பார்த்துவிட்டு ரகசியமாக) கொஞ்சம் பேச்சை நிறுத்திக்கோ. பையன் வரான்.

விசு:—(ரகசியமாக) ஏன்? அவனுக்கு இது தெரியாதான்னு?

ரகு:—(கையில் பல் குத்த வைத்திருந்த குண்டூசியின் கூரால் ஓசைப்படாமல் நைஸாக விசுவின் முதுகில் ஒரு தாக்கு தாக்கி, ரகசியமாக) பேசாதிருடா, நான் அப்புறம் சொல்றேன்னு!..........

விசு:—(பையன் வருகிறுன்) வா பையா, வா, எங்கேயோ வெளியிலே போகப் புறப்பட்டாப் போலே இருக்கு.

பையன்:—உள்ளே வரேன். வெளிலே போகப் போறேன்றையேடா, விசுவநாதா.

விசு:—நீ உள்ளே வரத்தைப் பாத்துத் தான் வான்னு அழைச்சேன். கையிலோ பாட்டு பேட்டு தூக்கிண்டு கிளம்பவே எங்கேயோ வெளிலே கிளம்பரையோன்னு கேட்டேன். தப்பா?

பை:—சே, சே! தப்புன்னு யாருடா சொன்னு. நீ என்ன வரவர இப்படி பூனைகாஞ்சி எலேயாப் போயிட்டே?

விசு:—ஏன்?

பை:—ஏதாவது வேடிக்கையாகச் சொன்னு ஒனக்கு வெனையாப் போயிடாதே!

விசு:—நானும் வேடிக்கையாய்த்தான் பதில் சொன்னேன்.

பை:—அப்படியானு ரொம்ப சரி. ஏதாவது கோபம் கீவம் வச்சுக்காதே.

[தகப்பனர்பக்கம்திரும்பி புன்சிரிப்புடன்] "என்ன ஒருமாதிரி கோவில் மூல விக்ரகம் மாதிரி முழிச்சிண்டிருக்கார் அப்பா, —என்ன ஆலோசனை?"

விசு:—ஒன்னுமில்லே. வெறுமென தான் அப்படி லோகாபிராமமா பேசிண்டிருக்கோம். ஒன்றும் விசேஷத்தைக் காணும்.

பை:—(வியப்புடன்) என்ன?

விசு:—(புன்சிரிப்புடன்) ஒன்றுமில்லையே.

பை:—ஒன்றுமில்லே?

விசு:—(உதட்டை பிதுக்கிக் கொண்டு) ஒண்ணுமில்லே!

பை:—நல்ல ஆளுப்பா நீ!

விசு:—ஏன்? என்ன?

பை :—(சிரித்துக் கொண்டே) இல்லே சொல்றேன்

விசு :—என் அப்படிச் சொல்றே?

பை :—(சிரித்துக் கொண்டே) இல்லே... முழு பூசனிக்காயைச் சோத்திலே மறைக்கிறையே...

விசு :—(கொஞ்சம் சந்தேகத்துடன்) என்ன நான் ஒன் கிட்டே ஒளிக்கிறேன்?

பை :—நான் இவ்வளவு நாழி எங்கேருந்தேன் தெரியுமோ?

ரகு :—(மெள்ள) எங்கே இருந்தே?

பை :—சொல்லட்டுமா?

விசு :—சொல்லு!

பை :—நான் சொல்றேன். நீ முன்னே இங்கே பேசின விஷயத்தை எனக்குச் சொல்லு.

(விசுநாதன் ரகுநாத ஐயங்கார் முகத்தைப் பார்த்தான். ஐயங்கார் விசுநாதனைப் பார்த்தார். இருவர் முகத்திலும் அசட்டுத்தனம் சொட்டிற்று!

விசு :—என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்? நெல்லுக்குள்ளே அரிசின்னு கண்டுட்டே.

பை :—நெல்லுக்குள்ளே அரிசி! ஆமாம் நான் பார்த்தேன்

ரகு :—பாத்தால் வச்சுக்கோ. உனக்கு பிராக்டிஸ்க்கு நாழியாகவில்லேயா? அதிருக்கட்டும். நேத்து பத்து ரூபாய் வாங்கிண்டு போனேயே எவ்வளவுக்கு வேஷ்டிகள் வாங்கினே? பாக்கி எவ்வளவு?

பை :—ஜரிகை வேஷ்டி ரெண்டு வாங்கினேன்.

ரகு :—ஜரிகை?

பை :—ஏன் வாங்கப்படாதா? பாக்கி ரெண்டு ரூபாய் என் ப்ரெண்டுக்கு ஒரு ஷர்ட்டு வாங்கினேன்.

ரகு :—ரொம்ப சந்தோஷம். சொத்தை நீ நன்னா வச்சு குப்பகொட்டுவே போ!

பை :—அதிருக்கட்டும், அதோ அம்மா வரா, அவளைக் கேளுங்கோ. சிரித்துக்கொண்டே, நெல்லுக்குள்ளே அரிசின்னு அவள் சொல்லுவள்.

ரகு :—திகைத்து இதென்னடா விசு?

விசு :—என்னைக்கேட்டா?

அம்மா :—(சிரிப்பை அடக்கிக்கொண்டு) இத்தனை நாழி கொட்டி அளந்துகொண்டிருந்தேள். இப்போ என்ன ஒண்ணும் பேச்சு வார்த்தையே காணும்?

பை :—இத்தனை நாழி நீங்க பேசினதெல்லாம் நானும் அம்மாவும் பக்கத்து ரூமிலிருந்துதான் கேட்டுண்டிருந்தோம்.

அம்மா :—கல்யாணம் நிச்சயம் பண்ணணும் என்கிறவா எங்க கிட்டே எல்லாம் சொல்லாதே நடத்தினால்தான் நடத்தினதா?

விசு :—இதுக்கென்ன இவ்வளவு அவசரம்? சொல்றோம் சாவகாசமாக.

பை :—அவளுக்கு வேணும்னுல சொல்ல வேண்டாம். எனக்காவது சொல்லி இருக்கணமோல்லியோ?

ரகு :—சொல்லாதேயா நடந்துடப் போறது?

பை :—அது வாஸ்தவம்தான்! வரதக்ஷிணை வந்தா அதை ஓசைப்படாதே வாங்கித்தான் வச்சிண்டுடுவார். கடைசியிலே தாலி கட்டரத்துக்கு நான்.

விசு :—ரூபாய் வாங்கிண்டு அவர் என்ன ஓடிபோயிடப் போறாரா? இல்லே, தேவடியா வீட்டுக்குக் கொண்டு போய் கொடுத்துடப்போறாரா?

பை :—எப்படியானால் என்ன? என் கைச்செலவுக்கு இல்லாத போயிடும்.

ரகு :—கேளுடா அப்பா, கேளு! இப்போ இவனுக்கு நான் ஒண்ணுமே கொடுக்கிறதில்லேயாம். கேத்துகூட.........

விசு :—சரிதான், அவன் அறியாதவன். தெரியாது. அப்படித்தான் சொல்லுவான்.

பை :—வாயைப்பாரு இவருக்கு. ஒரு ரூபாய்கூட பாக்கெட்மணி கொடுக்கிறதில்லே. என் கிளாஸ் கிட்டு இருக்கானே அவன் பாக்கெட்டிலே எப்பவும் ஒரு அஞ்சு ரூபாய் நோட்டு இருந்திண்டேருக்கு......என்......

விசு :—அவன் செலவழிக்காதேயே வச்சிண்டிருந்தா?

பை :—செலவழிக்காத வச்சிண்டிருக்க என்ன, முட்டாளா அவன்?

ரகு:—ஆனால்செலவழித்தாத்தான்கெட்டிக்காரன் போலேருக்கு உங்க படிப்பிலே?

பை :—காசு இருந்தால் செலவழிக்காதே பூட்டி வச்சிருப்பா? அப்படி வச்சிருக்கறவன் முட்டாள்தான்.

விசு :—இப்போ நீ என் செய்யணும்கறே?

பை :—என்னவா ? அவரைக் கேளு அப்பாவை !

ரகு :—என்னை என்ன கேக்கனும்?

பை :—எனக்கு டைம் ஆகிறது. ரெண்டாயிரத்தைன்னூரிலே ஆயிரத்தைன்னூரு எனக்குக் குடுத்துடனும்.

ரகு :—(கோபத்தை அடக்கிக் கொண்டு) இதானே சரி. அப்படியே ஆகட்டும், போ.

பை :—எனக்கு ரூபாய் வந்தாத்தான் முடியும். கோட் கிட்டுல்லாம் தச்சுக்கணும்; அப்புறம் கொஞ்ச நாளேக்காவது சினிமாவுக்கு துட்டு பஞ்சம் இல்லாமே இருக்கும்.

ரகு :—ரொம்ப கெட்டிக்காரன்! சினிமாவுக்கு துட்டு பஞ்சமில்லாதே இருக்கும்னியே ! பப்பரமெண்டுக்கு துட்டு பஞ்சமில்லேன்னுதெ ...... வடசு குட்டிச் சுவருக்கு ஆகிருப் போலே ஆகிறது!

விசு :—வெறுமே அதெல்லாம் என்ன, சும்மா இருங்கோன்னு. அறியாதவன்.

பை :—சரி, நான் போறேன் டென்னிஸ் கோர்ட்டுக்கு. லேட்டாய் டுத்து.

(அம்மாவும் பையனும் போகிறார்கள்.)

ரகு :—(வாடிய முகத்துடன்) பாத்தியோல்லியோ. இப்படி தத்தாரி மாதிரி திரியறதுடா, பணத்தை செலவழிச்சுண்டு......

விசு :—எல்லாம் இன்னும் கொஞ்ச நாளானுத் தெரிஞ்சுக்குவான். ஆனல்...

ரகு :—என்ன ஆனல் ?

விசு :—உங்களைப் போல அவ்வளவு சிக்கனமா இருக்கமாட்டான். அதுக்கென்னபண்ணலாம் இந்த நாளைப் பையல்,

ரகு :—இந்த மாதிரி செலவழிக்கிற பிள்ளைக்கு நான் வரதக்ஷணைக்கு மன்றாடினேன்......இப்போ ஏன் செய்கிறேம்னு தோணறது. .

விசு :—அது அப்படித்தான் இருக்கும்ணு. மைனர். அதிருக்கட்டும். அவாள் இரண்டாயிரத்தை நூறுக்கும் ஒத்துண்டாளா ?

ரகு :—என்னமோ போடா. இந்த பையன் இப்படி இருக்கிறது எனக் கொன்னும் பிடிக்கலே. நாலு மாஸத்தலே செலவழித்துடுவாண்டா இந்த ரூபாயை.

விசு:—அதைப்பத்தி என்ன? இவனுக்குப் புத்தி சொல்லி விடலாம்...... பெண்ணுத்துக்காரா ஒத்துண்டாளா ?

ரகு: —ஒத்துக்கும்படியாப் பண்ணீட்டேன்.

விசு—எப்படி ?

ரகு:—கல்யாணச்செலவு போக பாக்கி ஆயிரத்தைன்னூறு ரூபாய்தான் பாக்கி இருக்கிறது. அதங்குமேலே இல்லேன்னு.

விசு:—இல்லேன்னு, எங்கேயாவது பெறட்டச் சொல்றது.

ரகு:—அவன் எங்கே பெறட்டாது. அவன் தான் பெறளனும்.

விசு: —அது வாஸ்தவந்தான். நெலத்துக்காரனுக்கு இப்போ பணம் பெறளறதேது? அப்புறம் என்ன பண்ணினேள்

ரகு:—ஆயிரம் ரூபாய் என்னை கடன் கேட்டான்.

விசு:—ஊம் ஊம், அதெல்லாம் கொண்டகுடுத்த எடத்திலே வச்சிக்கப்படாது.

ரகு:—அதனலேதான் ,நம்ப ஸேட்டுக்கு சிபார்சு பண்ணினேன், ஆயிரம் ரூபாய்க்கு.

விசு:—கொடுக்கிறேன்னு சொன்னுனு?

ரகு: —கொடுக்காதென்னடா நான்சொல்லச்சே?...அதோ யாரோ கீழே இருந்து கூப்பிட்டாள். யாருன்னுபாக்கறேன்.

(வெளியே போகிறார்.)

(ஜமக்ராஜ் ஸேட்டுடன் திரும்பி வருகிறார்.)

ஸேட்:—என்னு நீ நம்பள்கி, அப்படி வுட்டுட்டே.

ரகு:—என்னு?

ஸேட்:—அவன்கி நம்பரூபா கொடுக்க மாட்டோம். அவன் நம்பள்கி லேவாதேவி இல்லே, புச்சு.

ரகு:—பெரிய ஜமீன்தார், ஸேட்ஜி.

ஸேட்:—அரே ஸாமீஜீ ! நம்பல்கி ஜமீன்தார் வானும்.

விசு:—ஐயங்கார்தான் சொன்னரே, போதாதா ?

ஸேட்:—சொன்னுன்றே நம்பள்கிட்டே. நம்பள்கி சீட்டு ஒணும். இல்லே நம்ப பைசாகூட குடுக்க மாட்டோம்.
ரகு:—என்னடா விசு பண்றது?
விசு:—ஒரு சீட்டுத்தான் கொடுத்துடுங்களேன்.
ரகு:—அப்பறம் சம்மந்தி ஏமாத்திட்டானு.
ஸேட் :—அரே பாபா! அவன் ஏன் எமாத்தரான் ?
ரகு :—அப்படின்னு நீ அவளேயே நம்பிக் கொடேன்.
ஸேட் :—நம்பள்கி அது ஆகாது. உன்கி வரதட்சணை ஒணும்னு நீ உன் சம்பந்திக்குக் காரெண்டி எழுதிக்கொடு. பணம் நம்ப உன்னதான் கேப்பான்.
விசு :—ஒரு சீட்டு நீங்கதான் கொடுத்துடுங்கோன்னு. அவன் ஏமாத்த மாட்டான்.
ரகு :—ஏமாத்தினுன்னு?
விசு :—ஏமாத்தினுன்னு அப்புறம் சாந்தி முகூர்த்தம் இல்லையா?
ரகு :—ஆமாம் அதிலே பிடித்து அமுக்கிக்கலாம்.
(ஐயங்கார் சேட்டுக்கு சம்பந்தி பேருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க சீட்டு எழுதி கொடுத்தார். ஸேட் அதை வாங்கிக் கொண்டு நமஸ்காரம் செய்துவிட்டுப் போகிறுன்.)
ரகு :—எவ்வளவு சிரமம்டாப்பா இந்த வரதக்ஷிணைக்கு. இதை அழிக்க கால் கோட்டிண்டிருக்கான் பிள்ளையாண்டான்.
விசு :—வர தக்ஷிணைதானே? அவனுக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டியது தானே.
ரகு :—என்ன?
விசு :—(மௌனம்)...

(ர
திறை)

## புத்தக விமர்சனம்

### மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்

(மகரிஷி வ. வே. சு. அய்யர்) [சீர் திருத் திருத்திய 2-ம் பதிப்பு, அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. சாதாரண பைண்ட் அணு 12. காலிகோ பைண்ட் ரூ 1/—]

முதல் முதலாக முதல்தரமான சிறு கதைகள் தமிழில் எழுதிய பெருமை வ. வே. சு. அய்யர் அவர்களைச் சேர்ந்தது. அவற்றைச் சீர்திருத்தி இரண்டாம் பதிப்பாக அல்லயன்ஸ் கம்பெனியார் உயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறுர்கள். தமிழ் நாட்டுச் சிறு கதைகள் என்ற ஒரு தொகுதியில் இது முதல் புத்தகம்; ராஜாஜியின் குட்டிக் கதைகள் இரண்டாவது. இன்னும் தொடர்ச்சியாக சில சிறு கதைப் புத்தகங்கள் வெளி வரப் போவதாகத் தெரிகிறது.

இந்தப் புத்தகத்தில் இருக்கும் எட்டுக் கதைகளும் தமிழ் நாட்டின் இலக்கியத்தின் பொக்கிஷம். மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன் என்ற இரண்டும் பழந் தமிழ் மணம் வீசும் சோலை மலர்கள். குளத்தங்கரை அரசமரம் உள்ளத்தை உருக்கும் சமூக சித்திரம். லைலி மஜனூன், அனூர்க்கலி, இரண்டும் மனோகரமான கற்பனைகள். பாரசிகத்தின் பரிமள வாழ்வும் மொகலாயர்களின் மணம் கமழ் மகிழ்ச்சியும் அக் கதைகளில் மறுபடியும் உயிர் பெற்றுத் தெரிகின்றன.

ஆசிரியரின் கதைபுனையும் திறமையும் ஜ்வலிக்கும் நடையும் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### வரப் பெற்றோம்.

1. விகட கேஸரி (தமிழ் மாதப் பத்திரிகை முதல் இதழ். கும்பகோணம். விலை அணு ஒன்று.)
2. தேள் கடி வைத்திய முறைகள் (ஸ்ரீ அகஸ்திய ஔஷதாலயம், திரிப்பூர திரிப்புலியூர்.)
3. திருநாவக்கரசு வித்தியாசாலை ஆண்டு அறிக்கை 1939, கேமத்தான்பட்டி.
4. இந்தியக் கைத்தொழில் முன்னேற்றம். (ஆசிரியர். எஸ். ராமசந்திர அய்யர், எம். ஏ., பெங்களூர்.)

# யூகோசிலேவியா

(ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி)

அல்பேனியாவின் வீழ்ச்சியின் பலனை உடன் பாதிக்கப்படும் யூகோசிலேயாவிற்கு உத்திரவாதமளியாமல கிரீசுக்கும், ருமேனியாவிற்கும், போலந்திற்கும் பிரிட்டன் உத்திரவாதமளிப்பது அந்நாட்டின் மீது கண்ணுள்ள இத்தாலியையும், ஜெர்மனியையும் அதனை விழுங்கிக்கொள்ள அழைப்பதுபோ லிருக்கிறது. மகாயுத்தத்தின்போது நேசதேசமாக விருந்த செர்பியாவே இன்று யூகோசிலேவியாவாகத் திகழ்கிறது. அன்றுமுதல் யூகோசிலேவியா ப்ரான்சுடன் மிகவும் நெருங்கிப் பழகி வருகிறது. அதன் நட்பின் பலத்தாலேயே இத்தாலியின் கையாள் டுராசோ மேற்றி ராணியார் அல்பேனியாவை ஆண்டபோது அவரைக் கவிழ்த்த அரசர் ஜாக்கிற்கு உதவியது. அதன் காரணமாக அல்பேனியாவின் வடஜில்லாக்களை ஜாக் யூகோவிற்கு அளித்தார். ஆனால் ஜாக்கிற்கு யூகோவிடமிருந்து கடன் கிடைக்காததால் அவர் பின் இத்தாலியின் உதவியை நாடவேண்டியிருந்தது. 1924-ம் ஆண்டில் முசோலினி மேற்கிலிருக்கும் நாடுகள் வலுவுள்ளதாகவும் ஒரே சாதியினரைக் கொண்டதாகவுமிருப்பதால் ரோம் சாம்ராஜ்யத்தைக் கிழக்கேயே பரப்பவேண்டுமெனக் கூறினர். அதற்கு அல்பேனிய ஆதிக்யமிருந்தால் பால்கன் நாடுகளை அழுத்த சௌகர்யமா யிருக்குமன்றோ! ஆகவே ஜாக் கடன் கேட்டதும் இத்தாலி அளித்தது. இத்தாலி தடையின்றி பொருள் கொடுக்கவே அல்பேனியாவில் அதற்குப் பல சலுகைகளை அரசர் ஜாக் அளித்தார்.

இத்தாலியின் ஐரோப்பிய சாம்ராஜ்யம் நிறுவ சமயம் வந்துவிட்டதென முசோலினி கண்டார். தம்மைவிட கூட்டாளி ஹிட்லர் நாடுகளை அபகரிப்பது அவருக்குத் தனி மதிப்பு அளிப்பதாக இல்லை. ஸ்பெயின் விஜயம் ஜெக் ஆக்கிரமிப்பு போல் மகத்தானதாக இல்லை. பிரிட்டனும் பிரான்சும் தங்கள் பக்கத்தில் நாடுகளை இழுக்கத்தொடங்கி விட்டன. எனவே முசோலினி தமக்குரிய தருணம் வந்து விட்டதெனக் கண்டு இத்தாலிய மக்கள் நசுக்கப்படுகிறார்களென்றும் அல்பேனிய மக்களே அழைக்கிறார்களென்றும் கூறி, அல்பேனியாவில் இத்தாலியக் கொடியை நாட்டினர். ஆங்கிலேயர் இந்தியாவில் இம்மாதிரியே ஜனங்கள் அழைத்தார்களென்றும் கூறி அதற்கேற்கேற்ப சில மீர் ஜாபர்களைத் தயார் செய்து நாடு பிடித்தார்களென்பது குறிப்பிடத்தக்கது.

இன்று யூகோவை வடக்கில் ஜெர்மனியும் ஹங்கேரியும், கிழக்கில் பல்கேரியாவும், தெற்கில் இத்தாலிய அல்பேனியாவும், மேற்கில் இத்தாலிய ஓடை எட்ரியாடிக் கடலும் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. சுற்றியுள்ள இரு வல்லரசுகளும் பங்கு போட்டுக் கொள்ளுவதற்கும், அவ்வாறு சிதறும்பொழுது தங்கள் மைனரிட்டி பிரதேசங்களை எடுத்துக்கொள்ள மற்ற இரு நாடுகளும் காத்துக்கொண் டிருக்கின்றன. கொஞ்ச எல்லை தூரத்திற்கே கிழக்கில் ருமேனியாவுடனும், தெற்கில் கிரீசுடனும் யூகோ தொடர்ந்திருக்கிறது. அவ்வாறு யூகோ திரிநாடுகளால் சூழப்பட்டிருந்தும் பிரிட்டன் உதவ முன் வராத தேன்? போலந்து பிடிவாதமாக விருப்பதால் மகாயுத்தம் நேருமென்ற பயத்தாலே அதற்கும் அதன் விளைவாக ருமேனியாவிற்கும் கிரீசிற்கும் பிரிட்டன் உத்திரவாத மளித்தது. அவ் வுத்திரவாதம் பலனுள்ளதாக விருக்கவே துருக்கியுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. மற்றப்படி ஜெர்மனியோ, இத்தாலியோ ஜெக் நாட்டைப்போன்றோ அன்றி அல்பேனியாவைப் போன்றோ நாடுகளை யுத்தமின்றி விழுங்கினால் பிரிட்டனுக்கு அக்கரையில்லை. இன்னும் பிரிட்டனுக்குப் போலந்து ஜெர்மனிக்கு டான்சிக் விஷயத்தில் விட்டுக்கொடுக்க வேண்டுமென்றே அவா. அதற்கு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையே அத்தாட்சி. அதனாலேயே ரஷ்யாவுடன் ஒப்பந்தம்

செய்துகொள்ளவும் தயங்குகிறது. யுத்தம் வராமலிருந்தால் தான் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். யுத்தம் வந்தால் ஆயுதங்கள் பெருகியிருக்கும் இக்காலத்தில் அது உலக யுத்தமாக மாறக்கூடுமென்றும் அதில் தான் கலக்கவேண்டியிருக்குமென்றும் அதனால் தன் நன்மை பாதிக்கப்படுமென்றே பிரிட்டன் அஞ்சுகிறது. அதற்குக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்தில அக்கரையில்லை. போலந்து தனித்தும் போராடத் தயாராயிருந்ததாலேயே யுத்தத்தைத் தவிர்க்கவே தலையிட்டது. இந்தியத் தேசியவாதிகள் டாக்டர் ஷாட் யோசனையைப் புறக்கணித்தாலும் ஜனநாயக பிரிட்டன் வெளிநாட்டு அமைச்சர் ஹலிபாக்ஸ் பிரபு இன்னும் ஜெர்மனி வர்த்தகம் பெருக உதவுவதாகக் கூறுவதைக் கவனிக்கவேண்டும். அத்தகைய மனப்பான்மை இந்தியா-பிரிட்டன் உடன்படிக்கையில் இல்லை. அதன் பொருள் என்ன? நாஜி, தனியாட்சி ஜெர்மன் விஷயத்தில் ஜனநாயகம் பிரிட்டனுக்கு ஏன் அவ்வளவு அக்கரை?

அல்பேனியாவை முசோலினி ஆக்கிரமித்தபோது ஹிட்லர் ஆஸ்திரியாவைக் கைப்பற்றியபோது ஜெக் நாட்டிற்குக் கூடியதற்கிணங்க உத்திரவாதமளித்தார். அவ்வுத்திரவாதத்திற்கு மதிப்பென்ன? சர்வதேச சங்கத்தில் தானே சேர்த்த அபிசீனியாவை விழுங்கவில்லையா? இத்தாலி யூகோவைத் தாக்குவதற்குச் சௌகரியமாக அதன் வட எல்லையிலுள்ள பியூம் துறைமுகமும் யூகோவின் மத்தியக் கடற்கரையிலுள்ள ஜாரா துறைமுகம் யூகோவின் தென் கிழக்கிலுள்ள லகோஸ்டா தீவும் இத்தாலியின் ஆட்சியிலிருக்கின்றன. தவிரவும் யூகோவின் வட பாகத்திலுள்ள குரோடியர் சுயவாட்சி வேண்டுமெனக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஜெர்மன் ஆதரவுமிருந்து வருகிறது. சென்ற மாதத்தில் நடந்த சமரசப் பேச்சுகள் வெற்றியுறவில்லை எனத் தெரிகிறது. குரோடியர் சுயவாட்சி வேண்டுவதுடன் ராணுவத்தையும் தங்களுக்குத் தனியே பிரிக்க வேண்டுமெனக் கோருகிறார்கள். அதன்பலன் என்னவாகும்? யூகோ ரோம் பர்லின் அச்சில் சேராவிடின் ஜெக் கதியை அடைய வேண்டிவரும். ஸ்லோவேகியத் தலைவர் டாக்டர் டிசோவைக் கிளப்பிய மாதிரி இங்கு ரோட் தலைவர் டாக்டர் மாட்செக்கைக் கிளப்பலாம். அவ்வாறான நிலைமை நேரலாமென்றே யூகோ தயங்குகிறது. தவிரவும் பாஸ்னியா மாகாணம் முழுதும் தங்கள் ஆட்சியிலிருக்கக் குரோடியர் விரும்புவதை பால் அரசர் விரும்பவில்லை. அந்நிலையிலே குரோட் குடியானவர் கட்சி ஹிளிங்கா தொண்டர் படைமுறையில் அதிர்ச்சிப் படையொன்றைத் திரட்டிவருகிறது. சென்ற மாதத்தில் அவர்கள் வல்லரசுகள் தங்கள் விஷயத்தில் தலையிட்டு நீதி வழங்க வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளார்கள். குரோடியரைத் தவிர ஹங்கேரியை ஒட்டிய பிரதேசத்தில் மாகியாரும் பல்கேரியா எல்லைப்புறத்தில் பல்கேரியரும், தெற்கில் அல்பேனியரும் ஒரு சிறு ஜெர்மன் மைனாரிட்டியும் அந்நாட்டிலிருப்பதால் ஜெக் நாட்டைச் சிதைத்த மாதிரி இதனையும் சிதறச் செய்யலாம். ஆனால் இன்று மேற்கு வல்லரசுகளின் ஐக்கிய அணியைக் கண்டே இத்தாலி யூகோவை வாளா விட்டிருக்கிறது நடுவில் இத்தொல்லை வேண்டாமென்றே. தவிரவும் யூகோ சிதைவால் ஜெர்மனி குரோடியாவை எடுத்துக்கொள்ளுவதுடன் வேறு பிரதேசங்களையும் அபகரிக்குமோ வென்ற பயமும் இத்தாலிக்கு உண்டு அவ்வாறு ஜெர்மன் சாம்ராஜ்யம் பெருகினால் ஆஸ்திரியாவின் ஐக்கியத்தால் வெனிஸ் வர்த்தகம் ஒழிந்த இத்தாலிக்கு எதிரியாதிக் வியாபாரம் பூராவும் மறைந்துவிடும். ஆகவே யூகோவைச் சும்மா விட்டிருக்கிறது. அதற்குக் கூலியாக தங்கள் வட்டாரத்தில் சேரும்படி அந்நாட்டை இத்தாலியும், ஜெர்மனியும் வற்புறுத்தி வருகின்றன.

யூகோவிற்கோ ஜனநாயக நாடுகளின் மீதே நம்பிக்கையுண்டு. தவிர. 1919-ல் இத்தாலி பலாத்காரமாகப் பியூம் நகரைக் கைப்பற்றியதிலிருந்து அதன் மீது நம்பிக்கையில்லை. அதனாலேயே அபிசீனியா போரின்போது இத்தாலியுடன் பிரான்சு நெருங்கவே யூகோ இத்தாலிக்குப் போட்டியாக ஜெர்மனி இருக்குமென எண்ணி அதனுடன் உறவாடியது. ஆஸ்திரியாவி

விருந்து ஷுஸ்னிக் ஆட்சியினின்றும் தப்பிவந்த நாஜிகளுக்கு யூகோ அபய மளித்து ஜெர்மன் உறவைப் பெருக்கிக் கொண்டது. ஆனல் இறுதியில் ஜெர்மன் இத்தாலி உறவு பெருகிவிடவே இதன் உறவு மதிப்பில்லாது போயிற்று.

அரசர் பாலும் வேந்தர் கரோலும் பேசுவதாயிருந்தது நின்றது. அரசர் பால் லண்டன் விஜயம் ரத்தாயிற்று. ஆனல் அவரது பர்லின் விஜயம் சிறப்புடன் புடன் நிறைவேறியது. இதிலிருந்து அறியக்கூடியதென்ன? யூகோ பிரிட்டன் உறவை நாடுகிறது. எனினும், அண்டை நாடுகளை மீறி எழ முடியவில்லை என்பதே. உள்நாட்டு நிலைமையினலும் ஜனநாயக நாடுகளின் அலட்சியத்தாலும் யூகோ ரோம்-பர்லின் அச்சில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சேர்ந்தால் ஆச்சரியமில்லை. ஆனல் அதற்குக் காரணம் பிரிட்டனே ஆகும். அதன் படிப்பினையாக நாம் அறிய வேண்டியது போரினல்தன் நன்மைபாதிக்கப்படுமென்றே பிரிட்டன் பிறநாடுகளில் தலையிடுகிறதென்றும் சிறு நாடுகளின் சுதந்திரத்தில் அதற்கு அக்கரையில்லை என்பதும் நாம் அறிய வேண்டும். போர் நேரின் இந்திய சாம்ராஜ்யம் என்னவாகுமென்ற பயமே. இங்கிலாந்தின் செல்வப் பெருக்கிற்கு இந்தியா வன்றோ காரணம்? ஆகவேதான் பிரிட்டன் தன் சாம்ராஜ்யத்திற்காக அவ்வளவு பாடுபடுகிறது. ஆகவே சிறு நாடுகள் சுதந்திர மிழப்பதற்கு நம் அடிமைத்தனமும் சிறிது காரணமாகும்.






# விடுமுறை

(ஸ்ரீ கே. எஸ். நரசிம்மாச்சாரி. பி. ஏ.)

என் சிறு நண்பர்களே! நீங்கள் விடுமுறை நாட்களில் உங்கள் உறவினர் வீடுகளுக்குப் போவதுண்டல்லவா? அதுபோலவே நானும் இக் கோடையில் என் அத்தைப் பாட்டியின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என் அத்தைப் பாட்டியின் மேல் எனக்கு ரொம்ப அன்பு உண்டு. ஏன் தெரியுமா? அவள் நல்ல கதைகளெல்லாம் சொல்லுவாள்.

ஓரிரவு, "அத்தை! ஒரு கதை சொல்லேன்" என்றேன். நாங்கள் எல்லோரும் குத்து விளக்கைச் சுற்றி உட்கார்ந்துகொண்டோம். அத்தை ஆரம்பித்தாள்.

"ஒரே ஒரு ஊரிலே கிருஷ்ணன் என்று ஒரு ஏழைப் பையன் இருந்தான். ஒருநாள் அவன் சாலை வழியே ரொம்ப தூரம் நடந்து போனான். கால் வலிக்க ஆரம்பிச்சுது. ஒரு மரத்து நிழல்லெ படுத்துத் தூங்கிப் போய்விட்டான்."

"அப்புறம்?" என்றாள் ஜயா.

"அவன் அயர்ந்து தூங்கும் பொழுது அனேகர் அவனைக் கடந்து போனார்கள். சிலர் அவனைக் கவனிக்கவே இல்லை. சிலர் அவன் வழியில் படுத்துத் தூங்குவதைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனார்கள். சிலர் அவன் அழகை மெச்சிக்கொண்டு போனார்கள்."

"அப்படீன்னா அவன் ரொம்ப அழகா?" என்றான் கிட்டு.

என் அத்தை— "ஆமாம். பிறகு அவ்வழியே ஒரு பணக்காரனும் அவன் மனைவியும் ஒரு வண்டியில் போய்க்கொண்டிருந்தார்கள். கிருஷ்ணன் கிட்டே வந்ததும் வண்டியின் அச்சு கழண்டுவிட்டது. அவர்கள் அங்கே இறங்கினதும் கிருஷ்ணன் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அவன் அழகில் மயங்கிவிட்டார்கள். அவள், 'எவ்வளவு லக்ஷணம்! அவனை எழுப்பி நம்முடன் அழைத்துக்கொண்டு போய்விடலாமா? நமக்குத்தான் பிள்ளை இல்லையே' என்றாள். அப் பணக்காரனுக்கும் அது நல்ல யோசனை என்று பட்டது. இதற்குள் வண்டிக்காரன் 'சரி பண்ணியாச்சுங்க' என்றான். அவர்கள் திடுக்கிட்டு, தாங்கள் அவ்விதம் செய்தால் உலகோர் சிரிப்பார்கள் என்று தங்கள் வழியே போய்விட்டார்கள்.

"அடடா, அவன் முழிச்சுக்காமல் போனானே! முழிச்சுண்டிருந்தா தூங்கப் போச்சே ஏழையாக இருந்தவன் முழிக்கச்சே பணக்காரன் ஆயிருப்பான்" என்றாள் ஜயா. "ஜயா கதையை நன்றாக கவனிக்கிறாள்" என்று அத்தை ஒரு 'ஸர்டிபிகேட்டும்' கொடுத்தாள்.

"அப்புறம் ஒரு அழகிய பெண் அவ்வழியே வந்தாள். அவளும் அவன் அழகில் மயங்கி விட்டாள். அவன் முகத்தைப் பார்த்தவண்

ணம் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தாள். ஆனால் ஏதோ சந்தடி கேட்டு, வெட்கத்தால் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

"அவன் விழித்திருந்தால் அவனை அவள் கலியாணம் பண்ணிக் கொண்டிருப்பாளோல்லியோ?" என்றான் கிட்டு. அதற்கு அத்தை "ஆமாம், ஏனென்றால் அப்பொழுது அவள் அப்பா அவளுக்காக ஒரு வரன் தேடிக் கொண்டிருந்தார்" என்றாள்.

"அவள் அப்பால் சென்றதும் இரண்டு கொள்ளைக்காரர்கள் கிருஷ்ணனிடம் வந்தார்கள். ஒருவன் கிருஷ்ணனுடைய பையைச் சோதிப்பதாகவும் மற்றொருவன், கிருஷ்ணன் எழுந்தால் அவன் தலையில் ஒரே அடியாய் அடித்துக் கொன்று விடுவதாகவும் பேசிக் கொண்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். ஆனால் அங்கு யாரோ வருவதைக்கண்டு இருவரும் ஓடிவிட்டார்கள்.

"ஐயோ பாவம்! கிருஷ்ணன் விழித்திருந்தால் செத்தே இருப்பான்" என்று நான் பச்சாத்தாபப் பட்டேன்.

ஐயா, அவசரமாய் "அப்புறம்?" என்றாள். "அப்புறம் ஒன்றுமில்லை. கிருஷ்ணன் விழித்ததும் வீடு போய்ச் சேர்ந்தான்" என்றாள் அத்தைப்பாட்டி.

"அவ்வளவுதானா? கதை சரியா முடியலையே. மூன்று கதை மாதிரியான்னா இருக்கு" என்றாள் ஐயா.

அத்தை "மூன்றில்லை ஒரு கதைதான். இந்தக் கதையின் கருத்தைச் சொல்லுகிறேன். நம் வாழ்க்கையில் எதிர் பாராததும் நாம் காணாததுமான விஷயங்கள் பல நேர்ந்தாலும் ஒரு ஒழுங்கு இருக்கிறது. நாம் அவைகள் எல்லாவற்றையும் அறிவோமானால் நமக்குத் தீராக் கவலை தான். ஐசுவர்யம், காதல், கொலை மூன்றும் கிருஷ்ணனை அணுகினாலும் அவனுக்கு அவைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவன் மனது தூக்கத்தில் ஒரே சாந்தமாகத்தான் இருந்தது. இதற்கெல்லாம் கடவுளின் அன்பே காரணம்" என்று முடித்தாள்.

"மணி பத்தாச்சு. படுத்துக் கொள்ளுங்கள்" என்றாள் அத்தை. நாங்களும் கலைந்தோம்.

[ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவியது]

---

இவ்வாரம் இடமில்லாததால் "நிரபராதி" என்ற சிறுகதை அடுத்த முத்தில் வெளியாகும்.

# வலை வீச்சு



## மைசூரில் தொழில் அபிவிருத்தி

சென்ற இரண்டு அல்லது மூன்று வருஷ காலமாக, மைசூர் சமஸ்தானம் தொழிலபி விருத்தியில் பல துறைகளிலும் முன்னேற்ற மேற்பட்டிருக்கிறது. எஃகுத் தொழிலும், பத்ராவதியில் ஸிமெண்ட் தொழிலும் ஆரம்ப மாகவே மைசூர் இரும்புத் தொழிற்சாலை வருஷத்தில் 40 லக்ஷம் ரூபாய் பெறுமான முள்ள உலோகத்தை உற்பத்தி செய்திருக் கிறது.

பத்ராவதியில் காகித மில் கட்டப்பட்டு வேலையும் ஆரம்பமாகி விட்டது.

சர்க்கார் போர்ஸிலேன் தொழிற்சாலையில் சில அபிவிருத்திகள் செய்யப்பட் டிருக்கின் றன. இதனால் உற்பத்தி அதிமாகவதுடன் பொருள்களின் தன்மையையும் முன்னேற்ற மடையும்.

சர்க்கார் மின்சாரத் தொழிற்சாலைக்காக அதிகமாக முதல் போடப்பட் டிருக்கிறது. பேக்லைட் வஸ்துக்கள், மெஷின்கள், மெஷின். சாமான்கள், தண்ணீர், மின்சார மீட்டர் முதலியவற்றின் உற்பத்தியை அதிகமாக்கும் உத்தேசத்துடன் இது செய்யப் பட்டிருக் கிறது.

பேலகோலாவில் ரஸாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மிஷின்களும் மற்ற சாமான்களும் வரவழைக்கப்பட்டு கட்டட வேலை ஆரம்பமாகி விட்டது. அடுத்த நவம் பரில் வேலை ஆரம்பமாகலாம்.

சிக்மகளூரில் காபி கியூரிங் தொழிற்சாலை யை ஆரம்பிக்கவும் பங்களூரில் கண்ணாடித் தொழிற் சாலையை ஆரம்பிக்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

விவசாயக் கருவிகளை ஹாஸென் என்ற இடத்தில் உற்பத்தி செய்ய சர்க்கார் உத்தரவு கொடுத்து விட்டார்கள்.

குடிசைத் தொழில்களை வளர்க்கும் உத் தேசத்துடன் நடைமுதல் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் ரூ 30,000 ஒதுக்கப்பட் டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இது தவிர தொழிற்சாலைகளைக் கவனித் துக் கொள்ளவும் நிர்வகிக்கவும் சர்க்கார் விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இவைகளை யெல்லாம் கவனிக்கும் போது மைசூர் சர்க்கார் தொழிலபிவிருத்தியில் உச் சாணிக் கிளையைத் தாவிப் பிடித்துவிட கங் கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்களென்ப தைத் தெரிந்து கொள்கிறோம்.

இந்த சமயத்தில், மைசூர் சட்ட சபையில் ஞாபகத்திற்கு வருகிறது. ஸர் மிர்ஸா இஸ்மெ யில் பேசியதாவது:

“நாம் கைக்கொண்டிருக்கும் தொழிலபி விருத்தி முறை. கொள்கையில் தவறாகவோ, அல்லது நமது சமஸ்தானத்திற்குப் பொருந் தாததாகவோ இருக்கவில்லை என்று கூறுகி றேன். உண்மையில், நமது தொழிலபிவிருத்தித் திட்டத்தை முன்னைக் காட்டிலும் வேகமாக நடத்தி வைப்பது தான் நமது திடமான தீர் மானம் என்பதைக் கூற நான் ஆசைப்படுகி றேன். எல்லாத் துறையிலும் மக்களின் வாழ்க் கை நிலையை உயர்த்துவதற்கும், ஜனங்களது, சர்க்காரது, வரும்படியை உயர்த்தவும், ஜனங் கள் நிலத்தையே நம்பி இராதபடி செய்வதற் கும் இந்த ஒரு வழிதான் இருக்கிறது என்று எனக்கு விளங்கி விட்டது.” திவான் சர்க்கார் கொள்கையைத் தெளிவாக விளக்கி விட்டார். இந்தக் கொள்கை தான் மைசூரின் எதிர்கால அபிவிருத்திக்கு அடிப்படையாக இருக்கும்.

## வகுப்புக் கலவரங்கள்

இந்தியாவிலுள்ள வகுப்புக் கலவரங்களைப் பற்றி லார்ட் ஜெட்லண்ட் ஏகாதிபத்ய விருந் தில் மோசமாகக் கூறியது, பத்திரிகைச் செய்திகளை நாம் நம்பினோமானால், நன்மை யாகவே முடியலாம் என்று கருதலாம். லார்ட் ஜெட்லண்டின் பேச்சால் சில தலைவர்களுக்கு ரோஷ மேற்பட்டதாகக் கூறப்படுகிறது. உடனே அவர்கள் இந்த வகுப்புப் பிரச்னை யைத் தீர்த்து, இந்தியர்களுக்கு ஒற்றுமை கிடையாது என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள்

இடித்துக் காண்பிக்க முடியாதபடி செய்து விடுவதென்று கிளம்பியிருக்கிறார்கள். இச் சிக்கலான பிரச்னையைத் தீர்க்க அவர்கள் சொல்லும் வழி புதிதல்ல. ஏனென்றால் முன்பு காங்கிரஸ்—லீக் பேச்சு வார்த்தை நடந்த முறையில் தான் இதுவும் இருக்கிறது. ஆனால், ஆகா கான், ஸர் ஜகதீஷ் பிரஸாத் ஸர், என். என். ஸர்க்கார், ஸர் அக்பர் ஹைதாரி முதலியோர்களது பெயர்கள் இந்தப் புதிய முயற்சியுடன் சம்பந்தப்படாவிட்டால், முடிவைப் பற்றி அதைர்யப்படத் தான் வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் நான்கு தலைவர்களாக எட்டுத் தலைவர்கள் முதன் முதலில் சந்தித்து சமரசக் கோரிக்கைகளை நிச்சயிக்க வேண்டும். இரண்டு சமூகங்களுக்கும் தனித்தனியாக இரண்டு "உரிமைப் பத்திரங்களை" தயாரிக்க வேண்டுமென்று ஆகாகான் கூறுவதாகத் தெரிகிறது. இந்தப் பத்திரத்தை எப்படித் தயாரிப்பதென்ற விபரம் விளக்கப்படவில்லை. ஆனால் அப்பத்திரங்களின் விதிகளின்படி நடக்க வேண்டுமென்று மாகாண சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப்படுமென்றும், மீறினால் அது சமஷ்டி கோர்ட்டுக்கு தீர்மானத்துக்கு அனுப்பப்படுமென்றும் சமஷ்டிக் கோர்ட்டின் தீர்ப்பு இரண்டு கட்சிகளை கட்டுப்படுத்துவதல்லாமல் மாகாண சர்க்காரைக் கட்டுப் படுத்துமென்றும் தோன்றுகிறது. இந்தத் திட்டம் நன்றாயிருக்கிறது. அது முக்கியமாக சுருக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதல்லாமல் அவற்றை நிர்ணயிக்கும் வேலையைச் செய்வதால் மேற் சொன்ன வகுப்பு உரிமைப் பத்திரம் சுருக்கமானதுதான். இந்தப் புதிய முயற்சியை ஆரம்பித்தவர்கள் இரண்டு சமூகங்களின் ஒப்பற்ற உரிமைகளை மட்டுமல்லாமல், வேறுபாட்டிற்குக் காரணமாயுள்ள விஷயங்களையும் தீர்த்து விட்டார்களானால், கொடிய வகுப்பு வாதக் கலவரங்களை கைச்சரக்காக வைத்துக் கொண்டிருக்கும் வகுப்புத் தலைவர்கள் காலைவாரி விட்டவர்களாவார்கள். மற்ற சாதாரண ராஜீய விஷயங்களை, எல்லா சமூகங்களும் சர்க்காரை . நடத்தும் வேலையில் ஒன்று சேர்ந்து விட்டால், சுலபமாகத் தீர்த்துக் கொண்டு விடலாம் என்பது நமது நம்பிக்கை. இந்த வகுப்புப் பிரச்னை காங்கிரஸ் ஸ்தாபனத்தால் தீர்க்கக் கூடியதல்ல என்பது பல சமயம் ருஜுவாகியிருக்கிறது. தேசபக்தி இல்லாத, பழைய வகுப்புப்பேத உணர்ச்சிகளால் தூண்டப்பட்ட பெருவாரி ஜனங்களால் தீர்க்கப்பட வேண்டிய விஷயம் இது. கொஞ்சமும் எதிர்ப்பாராத இடத்திலிருந்து கூட சமரஸம் உண்டாகலாமல்லவா?

—இந்தியன் அபேர்ஸ்

## பெரிய கைத்தொழில்கள்

பெரிய கைத்தொழில்கள், சர்விஸ்கள் மூலப் பொருள் சாதனங்கள், ரயில்வே, ஆறுகள், கப்பல்கள், இன்னம் பொதுநல சாதனங்கள் சர்க்காரால் நடத்தப்பட வேண்டும், அல்லது சர்க்கார் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் தனது கொள்கையை கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தில் நிர்ணயித்திருக்கிறது. இதை ஆதாரமாகக் கொண்டே நாம் திட்டம் வகுக்க வேண்டும். இந்த சாதனங்கள் சர்க்காருக்கே சொந்தமானதாக யில்லாவிட்டாலும், சர்க்கார், பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து இவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தி இவை ஒழுங்காக நடக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுதுள்ள கைத்தொழில்களில் சொந்தஉரிமைகள் வேரூன்றியிருக்கின்றன. இந்தக் கைத்தொழில்கள் சர்க்காருக்கே சேர்ந்து விட வேண்டுமென்று சொல்வது அனுபவ சாத்தியமில்லாததாயிருக்கலாம்.

ஆனால் கைத்தொழில்கள், சர்க்காருக்குச் சொந்தமாயில்லாமலிருக்கையில் கூட, அவை சர்க்காரின் உதவியைப் பெற்று வந்தால், அல்லது பாதுகாப்பை அனுபவித்து வந்தால், அல்லது சர்க்காரின் பொதுக்கொள்கைக்கு மூலமாக நடந்துகொண்டால் எல்லாக் கைத்தொழில்களிலும் ஒரேவிதமாக நடக்குமாறு பார்த்துக்கொள்ள சர்க்கார் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இந்தக் கமிட்டியை நியமித்த தீர்மானத்தில் விவசாயத்தைப்பற்றிப் பிரஸ்தாபமேயில்லை. இந்நாட்டில் விவசாயமே ஒரு பெரிய கைத்தொழிலாகயிருப்பதால், இனியும் இருக்கப் போவதால், இதையும் கமிட்டி கவனித்து தேசியத் தொழில் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது.

—பண்டித ஜவஹர்லால்.

# லைப் அஷ்யூரன்ஸ்

"பல துளி பெரு வெள்ளம்"

(ஸ்ரீ எஸ். கே. சுப்ரமணியம், மானேஜிங்டைரக்டர் இண்டோ-லங்கா லைப் அஸ்யூரன்ஸ் கம்பெனி, மதராஸ்.)

1 கோடி பேர்களை இன்ஸ்யூர் செய்ததின் பலனாக, (1) 480 நூல் நூற்கும் மில்களை—ஸ்தாபிதஞ் செய்யலாம் என்றும்; (2) சுமார் ஒரு கோடி ஜனங்களுக்கு உணவு கொடுக்கலாம் என்றும்; (3) மில்களில் வேலை செய்யும் 24,00,000 சிப்பந்திகளை இன்ஸ்யூர் செய்ததின் பலனாக வருஷா வருஷம் 5, 76,0000 ரூபாய் இன்ஸ்யூரன்ஸ் நிதிக்குச் சேர்ந்துக் கொண்டேயிருக்கும் என்றும் முன் நிரூபத்தில் காட்டினேன். இப்பொழுது ஒரு கோடி பேர்களை இன்ஸ்யூர் செய்வது சுலபமா என்பதை ஆராய்வோம்.

இந்நாட்டில் 11 மாகாணங்கள் உண்டு அவைகளுள் 7,00,000 கிராமங்களுண்டு. மாகாணம் ஒன்றுக்கு 8½ லக்ஷமாக அல்லது கிராமத்துக்கு 20 பேர்களாக இன்ஸ்யூர் செய்யின், 1 கோடி தொடங்கி 1 கோடி 40 லக்ஷம் பேர்களை இன்ஸ்யூர் செய்வது மிகவும் சுலபமென்றே நான் நினைப்பேன். இந்தச் சீக்கிரத்தில் செய்வது எம்மால் எடுத்துக் கொள்ளும் சிரமத்தைப் பொறுத்தது. இதை ஒரு வருஷத்திலும் செய்யலாம் அல்லது 9 வருஷத்திலும் செய்யலாம். ஆனால் வருஷா வருஷம் வெளியேறிக் கொண்டிருக்கும் 27 கோடி ரூபாவை உடனே நிறுத்திவிட வேண்டுமாயின், கூடிய சீக்கிரத்தில் 11 மாகாணத்திலும் உள்ள தேச பக்தர்களும், தேச ஊழியர்களும், ஒருங்கே கூடிக் கிராமங்கள் தோறும் இன்ஸ்யூர் செய்யின் ஒரு வருஷத்திலும் செய்யலாம் என்பது என்னுடைய சிற்றறிவு. 1 கோடிபேரை இன்ஸ்யூர் செய்யின், நபர் ஒன்றுக்கு ரூபாய் 10 விதம் கமிஷன் வகையறா செலவுக்கு எனக் கணக்கிடினும், 10 கோடி செலவுக் கணக்கில் போக 14 கோடி மிச்சமாகும். இரண்டாம் வருஷம் அப்படியே என்று கணக்கிடினும், 2 வருஷத்தில் 28 கோடி ரூபாய் இன்ஸ்யூரன்ஸ் நிதியில் சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு கோடி பேர்களை இன்ஸ்யூர் செய்ததன் பலனாக, 480 மில்களை ஸ்தாபிதஞ் செய்வது சுலபமாகும். இது நம்மால் செய்யக் கூடிய சக்திக்குள்ளடங்கியிருக்கிறது. இதைப் பூர்த்தி செய்ய ஒவ்வொரு மானேஜரும் (காரியதரிசியும்) 20 சீப் ஏஜண்டுகளும், சுமார் 700 சப்-ஏஜண்டுகளும் போதும்.

ஒவ்வொரு சீப் - ஏஜண்டுக்குக் கீழ் 40 சப் - ஏஜண்டுகள் கடமை செய்வார்கள். ஒவ்வொருவரும் 2000 நபர்களிடமிருந்து வசூல் செய்யும் பணத்தொகை, மாத வீதம் 4000/-ரூபாய் ஆகும். ஆகையால் 4000×40=1,60,0000 ரூபாய் ஆகும். 100/-க்கு சப் - ஏஜண்டுகளின் கமிஷன் 5% விதமும், சீப்-ஏஜண்டுகளுக்கு 2½ வீதமும் மாகாண அதிகாரிகளுக்கும் அவ்விதம் 2½ வீதமும் ஆக 100/-க்கு மொத்தக் கமிஷன் 10% வீதம் ஆகும். இவ்விதம் ரூபாய் 10 கோடி கமிஷன் வகையறாவில் போக எஞ்சியது 14 கோடியென மேலே காட்டினேன்.

இந்நாட்டை மேலத் தேசங்களைப்போல உயர்ந்த நிலைக்கு உயர்த்தி மேன்மையடையச் செய்வது மிகவும் சுலபம் என்று தோன்றுகிறதல்லவா? தற்பொழுது இந்நாட்டு மக்கள் வறுமையின் கொடுமையால் அயல் தேசங்களுக்குப் போய் தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர்த் தோட்டங்களிலும். இன்னும் அத்தேசங்களிற் புகாத பகிரங்க வீதிகளிலும் வேலை செய்து இம்சைப் படுகிறார்கள். இவைகள் யாவும் இந்நாட்டுக்கு அவமானத்தை விளைவிக்கின்றதல்லவா? இப் பாரத மாதா பண்டைக்காலத்திலிருந்த சீர் எங்கே? பவுசு எங்கே? செல்வம் எங்கே? வீரம் எங்கே? பிராணத்தியாகஞ் செய்து இப்பாரதமாதாவின் கௌரவத்தைக்காத்த புத்திர புத்திரிகள் எங்கே? தேச பக்தி வளர்ந்து விரக சந்தமேற ஆவேசத்தோடு ஜெயில் புகும் புருஷோத்தமர்களே! ஸ்திரீரத்

தனங்களே! ஒன்று சேருங்கள். இந்நாட்டை இன்ஸ்யூரன்ஸ் வாயிலாக உயர்த்தி விடலாம் என்பது நிச்சயம். இந்நாடு வெகுகாலம் எல்லாத் துறையிலும் அடிமையாக இருந்து விட்டது. ஆனல் இப்பொழுது பாரதமாதா நித்திரையிலிருந்து விழிக்கிருள்! இவள் வெகு காலமாக தூங்கிவிட்டாள்! இங்கே களங்கமறத் துலங்கிய சூரியன் பின்னும் கீழ்த் திசையில் உதயஞ் செய்கிருள்! இவள் முன்னிருந்த உன்னத பதவியினும் மேலான நிலையை அடையப்போகின்ருள். இந்நாட்டின் அடிமைத்தனமும், வறுமைத்தனமும் நீங்கவேண்டும் என்று மனவலியுடன் நீங்கள் ஒருங்கே திரண்ட அன்றே நமக்கு விமோசனம் உண்டாகும். இதற்குச் சந்தேகமில்லை.

உலக முழுவதும் கீர்த்தி பெருக்கி இந்நாட்டில் பன்முறையும் தோன்றிய அவ்தார புருஷர்களுக்குள் ஒருவராக விளங்கும் காந்தி மகான், ஒரு கை உப்பு அள்ளி அதன் பலனை இப்பொழுது 8 மாகாணங்கள் காங்கிரஸ் ராஜ்யமாகவில்லையா? இந்தியர்களை மீளா அடிமை ஸ்தானத்தில் என்றும் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை அடிப்படையில் கொண்டவர்கள் (அநேகமாக நியாய துரந்தரர்களும், மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்தவர்களுமாயிருந்தும்) காந்தி மகானின் ஆத்ம சக்திக்கு எதிரில் நிற்க இயலாது. தாம் எடுத்த நோக்கம் முற்றும் படாடியாக நொருக்கப் பட்டு, தோல்வி யடைந்து ஏக்கம் கொள்ள வில்லையா? ஆகையால் தேச பக்தர்களே! நீங்கள் இன்றே மேலே காட்டியுள்ள தேச சேவையை ஆரம்பிக்க முன் வருவீர்களாக.

லைப் இன்ஷ்யூரன்ஸ் வாயிலாக ஸ்தாபிக்கப்படும் 480 மில்களுக்கு மானேஜர்களும், லிகிதர்களும் இன்னும் அதைச் சேர்ந்த வகையிலுள்ள காரியஸ்தர்களும் மொத்தம் 6000 பேர்களுக்கு வேலை கொடுப்பதுடன், 480 மில்களை சுற்றியிருக்கும் கிராமங்களிலுள்ள வறுமைக் கொடுமையில் அரைவாசி ஒழிந்துவிடச் செய்யலாம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒவ்வொரு மில்களிலும் வேலை செய்யும் சிப்பந்திகளும் இன்னும் பலவித வியாபாரிகளும் சேர்ந்த ஒரு இடத்தில் சுமார் 30,000 ஜனங்கள் குடியிருப்பார்கள் எனக் கணக்கிடின் ஒவ்வொரு மில்லைச் சுற்றி ஒரு சிறு பட்டணமும் தோன்றி விடும். அத்துடன் பட்டணங்களுக்குத் தேவையான பலவித ஆபீஸ்களும், கச்சேரிகளும் பின் தொடரும். இவைகள் மூலமாக சர்க்காருக்கு வருமானமும் பெருகுமல்லவா?

மில்லில் வேலை செய்வோரின் பிரிமிய வகையால் ரூபாய் 5,70,00,000 வருஷாந்தம் வரும் என்று முன் கண்டோம். அதை விட மில்களில் நூல் ஜவுளி வியாபார வகையால்வரும் லாபத்தை பொதுசமூக ஈடேற்றத்துக்கு செலவழிக்கிறதே முக்கிய நோக்க மாகையால் அதைப் பின்னல் காணப்படும் வகையில் செலவு செய்யலாம். 5,70,00,000 ரூபாவையும் இன்ஸ்யூர் செய்த நபர்களுக்கு பாலிஸிகளின் பேரால் ஏற்படும் செலவுகளுக்கு என்றே ஒத்தி வைப்போம். 30,000 பேர்கள் வசிக்கும் பட்டணங்களில் ஒவ்வொரு உயர்தரக் கலாசாலை ஸ்தாபித்தல் மிகவும் அவசியம். அதற்கு உபகலாசாலைகள் மில்லைச்சுற்றி ஐந்து மைலுக்கு ஒன்று ஸ்தாபிக்க வேண்டும். பாடசாலைகளைச் சுற்றி இருக்கும் கிராமங்களிலுள்ள சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும், இலவசக் கல்வி 7-ம் வகுப்பு வரையும் கற்பிக்கிறது ஒவ்வொரு மில்லின் நோக்கமாக வேண்டும்.

தற்காலத்தில் வித்தியாசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி இந்நாட்டு மக்களின் ஜீவியத்தில் பிரயோஜனப் படும்படி செய்வதே கலாசாலைகளின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அது மாத்திரமா? ஆன்மா ஏகமாயுள்ளது ஆகையால் ஜாதி பேதமில்லை. ஜாதி பேதம் ஈசுவரனுலுண்டாக்கப்பட்டதன்று. அது சிலகாலத்தில் சில தந்திரியூகிகளால் அரசாங்கத்தை செவ்வனே நடத்தும்படி உண்டாக்கப்பட்ட சூட்சியம் என்று சில கலைவல்லாரின் துணிபு. அக்காலத்துக்கு அது தேவையாயிருந் திருக்கலாம். ஆனல் இக்காலத்துக்கு அது உதவாமல் விட்டது போலத் தோன்றுகிறது. இந்தத் தேசம் அடிமைப் பட நேரிட்ட பிரதான காரணங்களில் ஜாதி பேதத்தினுல் உண்டான ஒற்றுமையீனமும் ஒன்று என மேதாவிகளின் நாட்

டம். ஆகையால் தீண்டாமை, சாதி பேதம் இந் நாட்டை விட்டகல வேண்டும் என்று சிறுவர்களுக்கு இளமையிலேயே போதிக்க வேண்டும். இளமையிலே சகோதர அன்பு உதிக்க வேண்டும். எவ் விதத்தாலும் இப்பரதகண்டம் இன்னொரு ஜாதிக்கு அடிமையாய் இருப்பதிலும் ஜாதி பேதத்தைத்தள்ளி சுயாதீனம் பெறுவது உத்தமமல்லவா? கலாசாலையில் இளம் பிராயத்தில்தானே "பாப்பார இந்தியனும் பறைய இந்தியனும்" ஒன்றுசச் சேர்ந்து "நாமெல்லோரும் இம்மானிலத் தாயாகிய பாரதமாதாவின் புத்திர புத்திரிகள்: ஆகையால் சகோதரர்கள்" என்று அன் புடன் வளர வேண்டும். நாட்டின் புத்திர புத்திரிகளாகிய நாமனைவரும் "நீ சிறியவன், நான் பெரியவன், நீ அசுத் தன் நான் புனிதன், உன் உணவு அசுத் தம், என் உணவு புனிதம்" என்று பகையை உண்டாக்காமல் ஜீவிக்க வேண் டும். பெண்களுக்குக் கற்பிக்கும் பாடங்கள் சுகாதாரம், சமையல் பாகம், சொற்ப அள வில் இந்திய வைத்திய சாஸ்திரம், பண் டைக்கால உந்நதம், புருஷோத்தமரான வீரவான்களின் சரித்திரம், ஸ்திரீ ரத்த னங்களான கற்பாஸ்திரீகளின் பெருமை, முதலியவைகளாம். பாரதமாதா வணக் கமே எல்லாப் பாடசாலைகளிலும் நடப் பிக்கவேண்டும். மாணவர் கற்கும் பாஷை சுயபாஷையோடு இந்தியும் கற்க வேண் டும். இந்தியே பொது பாஷையாக வேண்டும்.

இப்பொழுது இந்தி படிப்பிக்கக்கூடாது என்று ஒரு கட்சி கிளம்பியது. இந்தி ஏன் கற்கக்கூடாது என்று விளக்க வைப் பார் யாருமில்லை. ஆனால் கருப்புக் கொடி பிடித்து கூக்குரல் வைத்துக்கொண்டு பகி ரங்க வீதிகளில் "இந்தி கூடாது" என்று கூட்டங் கூடிக் கரகோஷம் செய்கிறார்கள். ஏன் இந்தி கற்கக் கூடாது? அது வட பாஷையா யிருப்பதாலா?

இப்பொழுது இந்தியா முழுவதும் பேசும் பாஷையும் எழுதும் பாஷையும் இங்கிலீஷ்—ஒரு அந்நிய பாஷை. சொற் பொழிவு செய்யினும் இங்கிலீஷ். கவர்ன் மெண்டின் செய்கைகளைக் கண்டனஞ் செய்யினும் இங்கிலீஷ். அந்நிய பாஷையை யூரார் கற்றுக் கொள்ளலாம். அதற்காக லக்ஷக் கணக்காக பணத்தை அந்நிய நாட் டுக்கு கல்வி கற்கும் தடவாளங்கள் முத லானவைகளைத் தருவிக்க அனுப்பி இந் நாட்டை மேன்மேலும் அடிமையாக்க லாம். இவ்வூரிலுள்ள பாஷையை யாவ ரும் ஒத்துப் படித்து "நாம் எல்லா விதத் திலும் இந்தியன். என் ஊனும் உடையும் இந்தியன் என் எண்ணங்களும் ஆசை களும் இந்தியன்" என்று அடிமையை ஒழிக்க கங்கணம் கட்டுகிறதை விட்டு விண்வாதம் செய்கிறார்கள்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் விளை யாட முத்த வெளி இருக்க வேண்டும். சிறுவர்கள் தேகாப்பியாசஞ் செய்து கொள்வதுடன் ஒரே இடத்தில் கூடி விளை யாடுவதால் அன்பு வளரும். இந்நாட்டி லுள்ள பண்டைக்கால தேகாப்பியாச முறையை மீண்டும் கொண்டுவர வேண் டும். சுருக்கச் சொல்லின் கல்வி, செல் செல்வம், மாட்சிமை, புகழ், கீர்த்தி ஆகிய செல்வச் சின்னங்கள் பண்டைக்காலத்தில் இந்நாட்டிலிருந்த விதம் திரும்பியும் உதிக்கச் செய்ய வேண்டும்.

இன்னும் ஒவ்வொரு பாடசாலையை யண்டி ஒரு களிப்பாறும் மாளிகை, ஒரு புஸ்தகசாலை, வானொலி சங்கீத ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டும். அவையுடன் ஓர் ஆரோக்ய சாலை அல்லது ரோக நிவா ரண மாடம் ஒன்று ஸ்தாபிக்க வேண்டும். இங்கே ஆயுர் வேத சாஸ்திர முறையில் உற்பத்தியாக்கின ஔஷதங்களை உபயோ கிக்க வேண்டும். கிராமங்கள் தோறும் சுகாதார முறைகளை இந்த ஆரோக்கிய சாலைகள் மூலமாக கிராம வாசிகளுக்கு வாரம் ஒரு முறை போதிக்க வேண்டும். தேவையான இடங்களில் கிணறு, குழாய்க் கிணறு வைத்துக் கொடுக்கவேண்டும். தினமும் ஸ்நானம் செய்து அழுக்கில்லா மல் ஆடையணிந்து பாரதமாதாவை வணங்கின் அவளுக்குத் திருப்தி கொடுக் கும் என்று கிராம வாசிகளுக்குப் போதித் தல் வேண்டும். அப்படியானால் வீடுகள் தோறும் பாக்கிய லக்ஷ்மி வாசஞ் செய் வாள்; தைரிய லக்ஷ்மி தாண்டவமாடு வாள்; இந்நாடு செழிக்கும்.

இப்பாரத கண்டம் ஒரு விவசாய தேசம் மற்றைய நாடுகள்போல் இயந்திர வாயிலிக வியாபாரச் சரக்குகளைத் தயாரித்து, தேசங்கள் தோறும் விற்பனைசெய்து அதனால் ஜீவிக்கிறதன்று. நெல்லையும் பருத்தியையும் பிரதானமாகச் செய்கை பண்ணும் தேசம். ஆகையால் விவசாயத் தொழிலை மிக மலிவாகச் செய்யும்படி தாவர சாஸ்திரத்தை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். அநுபவஞானமுண்டாகும்படி அதை செய்து காட்டவேண்டும். ஒவ்வொரு 10 மைல் தூரத்திலும் ஒரு"பரீட்சை தோட்டம்" திறக்க வேண்டும். அதன் மூலமாய் விவசாயத்தொழிலை விருத்திபண்ணும்படி கிராம வாசிகளைக் கற்கவைக்க வேண்டும். 5 மைலுக் கொன்றாக பசுக்கள்மேயும் புல் வயல் ஸ்தாபிதஞ் செய்ய வேண்டும். மந்தைகள் தண்ணீர் குடிக்க இடையிடை ஒரு மடுவும் வேண்டும். (இங்கே நான் கூறியுள்ளவை பண்டைக்காலத்தில் அநேகமாக ஒரு கிராமத்தில் இருந்தவைகள்.)

தண்ணீர் இல்லாக் கொடுமையால் இப்பொழுது லக்ஷக் கணக்கான ஏக்கர் நிலங்கள் செய்கை பண்ணப்படாமலிருக்கின்றன. காடாகிக் கல்லும் காடுமாகி பிரயோஜனப் படாமலிருக்கின்றன. இந் நிலங்களை செய்கை பண்ணி பிரயோஜனப் படுத்தலாம். குளாய்க் கிணறுகளை உண்டு பண்ணி ஒழியாத தண்ணீர்ப் பாய்ச்சலைச் செய்யலாம். குளாய்க்கிணறுகளை ஸ்தாபிக்க அதிகச் சிலவு பிடிக்காது. இந்நிலங்களில் பலவிதமான புஷ்பச் செடிகளையும் கொல்லைகளையும், கனிவர்க்கங்களையும், எள்ளு, பயறு முதலிய சிறு தானியவகைகளையும் உற்பத்தி செய்யலாம். சமீபத்தியுள்ள மில் பட்டணங்களுக்கு அவைகளை அனுப்பலாம்.

இப்படிச் செய்வதில் இந்நாடு செழிப்படையும். செல்வச் சின்னங்கள் யாவும் தோற்றும். ஆகையால் 1-கோடி பேரை இன்ஸ்யூர் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது இயலாத காரியமல்ல. பல நாடுகளிலும் மலையைக் குடைந்து புகை ரத வீதி அமைக்கப்பட்டிருக்கிறதை நாம் பார்த்திருக்கிறோம். அகண்ட பூமியை வெட்டி இரு கடல்களைத் தொடுத்துவிட்டுக் கப்பல்களை அதனூடே யோட்டப் பார்த்திருக்கிறோம். மேலத் தேசங்களில் நிலத்துக்கு கீழே ரயில் பாதை போட்டு புகை ரதம் செல்கின்றது. கடலுக்குக் கீழ் பாரிய குழாய்களைப் பதித்து ரயில் பாதைவிட்டு, சைன்னியங்களைக்கொண்டு செல்லவு[illegible]ல தேசம் ஆயத்தஞ் செய்கிறது. எகிப்து தேசத்தில் "பிறமிட்ஸ்" யாவும் மனுஷரினால் செய்யப்பட்டதன்றோ!

தேசபக்தியினால் விரக சன்னதங் கொண்டு ஜெயிலுக்குள் புகும் புருஷோத்தமர்களே! நீங்கள் ஒருங்கே சேர்ந்து உங்கள் மனோவலியுடன் இந்நாட்டை உயர்த்த முயன்றால் ஒரு வருஷத்துக்குள் இந்நாடு வறுமையினின்றும் விடுதலையாகும். நீங்கள் எடுத்துக்கொண்ட தேச சேவையை முற்றுறச் செய்ய இதுவே மார்க்கம். கவர்ண்மென்டைக் கைப்பற்றியும் வறுமை போகாவிடின் பயன் என்ன? வறுமையைப் போக்கடித்து செல்வத்தை நாடெங்கும் ஒலிக்கச் செய்வதற்கு வழி இதுவே.

பருத்தி அயல் தேசங்களுக்குப் போகாமல் தடுப்பதே உங்கள் விரதமாகட்டும். விளைந்த பருத்தியை இந்நாட்டிலே உபயோகிக்க வேண்டுமானால் ஒருகோடி பேரை இன்ஸ்யூர் செய்ய இன்றே தீர்மானியுங்கள். இது கஷ்டமல்ல. மிகவும் லேசு.

ஒரு கோடிப் பேரை இன்ஸ்யூர் செய்யின் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள காங்கிரஸ் கவர்ண்மென்டே செய்யலாம். அல்லது எல்லா மாகாணத்திலுள்ள காங்கிரஸ் கவர்ண்மென்டுகளும் சேர்ந்து பிரதம காரியாலயமொன்றை ஸ்தாபித்து அதன் மூலமாகச் செய்யலாம். கவர்ண்மென்ட் துவங்கிச் செய்யின் கிராம வாசிகளும் சந்தேகமின்றி இன்ஸ்யூர் செய்து கொள்ளுவார்கள். இன்ஸ்யூரன்ஸ் நிதி வளர்ந்து விடும். எடுத்துக்கொண்ட நோக்கம் லகுவில் கைகூடும்; இப்பொழுது ஜாமீன் கட்ட வேண்டும் என்ற சட்டம் குறுக்கே நிற்க மாட்டாது. இங்கே காட்டியுள்ள நோக்கத்தை ஒருவராலும் தடுக்க முடியாது.



"திருநீலகண்டரில்" M. K. தியாகராஜ பாகவதர்

## அறிக்கை

கீழ்கண்ட இடங்களில் 'பாரத மணி'யை விற்க ஏஜண்டுகள் தேவை. 25 பிரதிகளுக்குக் குறைந்து ஏஜன்ஸி கொடுக்க முடியாது. டிபாஸிட் கட்டக் கூடியவர்களே விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| உதகமண்டலம் | திருமயம் |
| நாகூர் | திருத்துரைப்பூண்டி |
| விழுப்புரம் | நன்னிலம் |
| பெங்களூர் | பொள்ளாச்சி |
| பட்டுக்கோட்டை | கரூர் |
| மானமதுரை | திருவனந்தபுரம் |

மானேஜர்.

## மைலாப்பூர் ஆயுர்வேத வைத்தியசாலை.

லஸ், மைலாப்பூர்.

(போஸ்டாபீசுக்கு எதிரில்)

முன்பு ஷோரனூர் K. A. S. ஆஸ்பத்திரியில் 10 வருஷகாலமாக வைத்தியராக இருந்த டாக்டர் P. S. ராமநாதய்யர் அவர்கள் ரோகிகளை பரிசோதித்து தக்க சிகிச்சை செய்வார்.

எங்களிடம் மலையாளத்தி லிருந்து தயாராகி வரும் தைலங்கள், லேகியங்கள், கிருதங்கள் முதலான எல்லா ஆயுர்வேத மருந்துகளும் ஸரஸமான விலைக்கு கிடைக்கும்.

## விசேஷ அறிக்கை

முனிசிபல் எல்லைக்குட்படாத கிராமப் பிரதேசங்களில் ஐந்து சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பருக்கு ஒரு வருஷத்திற்கு 'பாரத மணி' இனமாக அனுப்பப்படும்.

மானேஜர்.

## ஹிந்தி-தமிழ் ஆசான்

இப்புஸ்தகத்தின் உதவியினால் இரண்டு மாதத்திற்குள் இந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ளலாம்.

புஸ்தகத்தின் விலை ரூ. 1-4-0
தபால் சிலவு ரூ. 0-4-0

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

ம. ரா. அப்பாதுரை, புஸ்தக வியாபாரி
57, ஆண்டர்சன் வீதி, எ பிளனேட்,
மதறு.